



# 2013 වාර්ෂික වාර්තාව அண்டறிக்கை ANNUAL REPORT





National Film Corporation of Sri Lanka
Ministry of Parliamentary Reforms & Mass Media

ශ්‍රී ලංකා ජාතික චිත්‍රපට සංස්ථාව
පාර්ලිමේන්තු ප්‍රතිසංස්කරණ හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය

இலங்கைத் தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனம்
பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்ச

# இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

# நிதிக் கூற்று

# 2013

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| அறிமுகம் | 01 |
| நிருவாக அறிக்கை | 02 - 27 |
| நிலுவை அறிக்கைகளில் இலாப நட்டக் கணக்குடனான குறிப்புகள் | 28 - 72 |
| கணக்காய்வாளர் அறிக்கை | 73 - 90 |

## - முன்னுரை –

திகதி :- 03.11.2014 எனது இல :என்எப்சி/103/05/02/95

மாண்புமிகு.கலாநிதி. கெஹெலிய ரம்புக்வெல,
மக்கள் தொடர்பாடல்,தகவல் அமைச்சர்,
மக்கள் தொடர்பாடல்,தகவல் அமைச்சு,
இல. 163, கிருளபன மாவத்தை,
பொல்ஹேன்கொட,
கொழும்பு 05.

மாண்புமிகு. அமைச்சர்,

**<u>இலங்கைத் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் – வருடாந்த ஆண்டறிக்கை – 2013</u>**

1980 ஆம் ஆண்டு 47 ஆம் இலக்க சட்டத்தினால் சீர்திருத்தப்பட்ட 1971 ஆம் ஆண்டு 47 ஆம் இலக்க தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன சட்டத்தின் 32(1) ஆம் பிரிவிற்கு இணங்கவும், நிதிச்சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவிற்கு இணங்கவும் 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கைத் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையானது பின்வரும் ஆவணங்களை இத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுகின்றது.

1. 2013 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தினால் ஆற்றப்பட்ட செயற்பாடுகளும் அவற்றுடன் தொடர்புபட்ட கூற்றுக்களும்.
2. இலாப நட்டக் கணக்கு, நிதிக் கூற்றுக்கள் குறிப்பு மற்றும் 2013 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கான ஐந்தொகை.
3. 2013 டிசெம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

உண்மையுள்ள,

அசோக சேரசிங்க, சட்டத்தரணி
தலைவர்,
இலங்கைத் தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனம்

## கட்டுப்பாட்டு அறிக்கை

1. அறிமுகம்
2. பணிப்பாளர்கள் சபை
3. உள்நாட்டு திரைப்படங்கள் தயாரிப்பு
4. திரைப்படங்களின் முக்கியத்துவம்
5. ஆளணி மற்றும் தாபனக் கட்டுப்பாடு
6. திரைப்படங்கள் / சினிமா விளம்பரங்கள்  விளம்பரப்படுத்தல்
7. திரைப்படங்களின் கண்காட்சி
8. உள்ளக கணக்காய்வுகள்
9. சினிமா, கலாசார மற்றும் கல்விசார்    செயற்பாடுகள்
10. உள்நாட்டு வழங்கல்கள், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி
11. திரைப்படக் கூடம்
12. சட்ட நடவடிக்கைகள்
13. நிதிச் செயற்பாடுகள்
14. கலையகம்
15. புலனாய்வு
16. நலப்பணி
17. விளையாட்டுக் கழகம்
18. சமய செயற்பாடுகள்
19. மருத்துவ  உதவித்  திட்டம்
20. வர்த்தக ஒன்றியம்
21. ஒப்புரை

## 1. அறிமுகம்

1980 ஆம் ஆண்டு 47 ஆம் இலக்க சட்டத்தினால் சீர்திருத்தப்பட்ட 1971 ஆம் ஆண்டு 47 ஆம் இலக்க தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன சட்டத்தின் 32(1) ஆம் பிரிவிற்கு இணங்கவும், நிதிச்சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவிற்கு இணங்கவும் மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சர் மாண்புமிகு.கலாநிதி. கெஹெலிய ரம்புக்வெல அவர்கள் மற்றும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு இலங்கைத் தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

2013 ஆம் ஆண்டிற்கான இவ் அறிக்கை இலங்கைத் தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 42 ஆவது செயற்பாட்டு வருடத்திற்கு ஏற்புடையது.

## 2. பணிப்பாளர்கள் சபை

### 2.1. 2013 ஆம் ஆண்டின் தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் சபை பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது.

1. திரு. அசோக சேரசிங்க , சட்டத்தரணி – தலைவர்
2. திரு.கருணாரத்ன , சட்டத்தரணி – வேலைப் பணிப்பாளர்
3. பேராசிரியர். ஆரியரத்ன அத்துகல – உறுப்பினர் (உத்தியோகபூர்வ) அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம்
4. திரு. சமன்த வெலிவீரிய , சட்டத்தரணி- உறுப்பினர் (உத்தியோகபூர்வ) இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம்
5. திரு. விஜித் கணுகல- உறுப்பினர் (உத்தியோகபூர்வ) – பணிப்பாளர், கலாச்சார அலுவல்கள் திணைக்களம்
6. பேராசிரியர் . ரொலாண்ட் அபேபால – உறுப்பினர்
7. கலாநிதி. பிரணீத் அபேசுந்தர – உறுப்பினர்
8. கலாநிதி . டி. வெங்கடேஷ்வரன் - உறுப்பினர்
9. திருமதி.ரேணுகா பாலசூரியா - உறுப்பினர்
10. திருமதி . மாலனி கமகே – திறைசேரிப் பிரதிநிதி
11. திருமதி. வத்சலா விக்கிரமாராய்ச்சி – சபைச் செயலாளர் /உதவிப் பொது முகாமையாளர் ( சட்டம்)

முன்னைய திறைசேரி பிரதிநிதியான நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் பணிப்பாளர் நாயகமான திருமதி. மாலனி கமகே அவர்கள் ஓய்வு பெற்றதும் 2013.11.25 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்வகையில் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் மேலதிக பணிப்பாளர் நாயகமான திருமதி. ஜெ .சி. வெலிகமகே அவர்கள் திறைசேரிப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருந்தார்.

## 3. <u>உள்ளூர் திரைப்படத் தயாரிப்பு</u>

### 3.1 <u>உள்ளூர் திரைப்படத் தயாரிப்பினைப் பதிவு செய்தல்</u>

2013 ஆம் வருடத்திற்கென 51 திரைப்படங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (தயாரிப்பாளர்களிடமிருந்து தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தால் பதிவுக் கட்டணமாக ரூபாய் 2000/- விதிக்கப்பட்டிருக்கின்றது )

### 3.2 <u>உள்ளூர் திரைப்படத் தயாரிப்பிற்காக வழங்கப்பட்ட கடன் வசதிகள்</u>

#### 3.2.1 <u>கலையக சேவைகளுக்கான கடன் வசதிகள்</u>

கலையக சேவைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட கடன் வசதிகளின் வரையறை ரூபாய் 400,000/-. இவ் வருடத்தில் கலையக சேவைகளின் கடன் வசதிக்காக திரைப்படத் தயாரிப்பாளர் எவரும் விண்ணப்பித்திருக்கவில்லை.

ஆயினும், குறிப்பிட்ட தயாரிப்பாளர்கள் அங்கீகரிக்கப்பட்ட கடன் எல்லையை மீறியுள்ள போது இயக்குனர் சபையின் அங்கீகாரப்படி மேலதிக கடன் வசதியாக ரூபாய். 100,000/= வழங்கப்பட்டுள்ளது

- “டபிள் றபிள்”
- “ஒலுவ ஜப்பான் கந்த ஜேர்மன்”
- “ஆதர பூஜாசனய”
- “எத்தா லணுவ தெம்மா கொடிய “

#### 3.2.2 <u>திரைப்படத் தயாரிப்பதற்கான கடன் வசதிகள்</u>

இவ் வருடத்தில் திரைப்படத் தயாரிப்பிற்கென எந்த கடன் வசதி எதுவும் வழங்கப்படவில்லை.

**விசேட குறிப்பு:**

கடன் வசதிகள் வேண்டப்பட்டு குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள திரைப்படங்களுக்கான உள்ளூர் திரைப்படங்ளை வகைப்படுத்துவதற்கு குழுச் சிபாரிசுகளின் கருத்தின் அடிப்படையில் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் படி பின்வரும் கடன் வசதிகள் வழங்கப்படும். இவ் வருடத்தில் இக் குழுவிற்கு திரைப்படங்கள் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.2.3 <u>விஷேட கடன் வசதிகள்</u>

இவ் வருட காலப்பகுதியில் விஷேட கடன் வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.2.4 <u>பிரதி அச்சிடலுக்கான கடன் வசதிகள்</u>

இவ் வருட காலப்பகுதியில் திரைப்பட பிரதிகளை அச்சிடுவதற்காக கடன் வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**3.2.5 விளம்பரப்படுத்தலுக்கான கடன் வசதிகள்**

இவ் வருட காலப்பகுதியில் விளம்பரத்திற்கென கடன் வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**3.2.6 உப தலைப்பிற்கான கடன் வசதிகள்**

இவ் வருட காலப்பகுதியில் உப தலைப்பிற்கான கடன் வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 தொழில்நுட்பவியலாளர்களைப் பதிவு செய்தல் மற்றும் புதிய அடையாள அட்டைகளை விநியோகித்தல்**

இவ் வருட காலப்பகுதியில் தொழில்நுட்பவியலாளர்கள் பதிவு செய்யப்படாத்துடன் புதிய அடையாள அட்டை விநியோகமோ அல்லது அடையாள அட்டைகளின் மீள் விநியோகமோ இடம்பெற்றிருக்கவில்லை.

**3.4 உள்ளூர் சினிமா தயாரிப்புக்களில் வெளிநாட்டு கலைஞர்கள் அல்லது தொழில்நுட்பவியலாளர்களின் பயன்படுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட அறவீடுகள் விதிப்பு**

உள்ளூர் சினிமா தயாரிப்புக்களில் வெளிநாட்டு கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களின் பயன்படுத்துவதற்காக அறவீடுகள் எதுவும் விதிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 உள்ளூர் தொடர்கள் / வர்த்தக/ ஆவண நிகழ்ச்சிகளுக்காக கமரா உபகரண அங்கீகரிப்பிற்கான அறவீடுகள்**

2 தொடர் திரைப்படங்கள் மற்றும் 1 வெளிநாட்டு வர்த்தக நிகழ்ச்சி என்பவற்றிடமிருந்து பொருத்தமான அறவீடுகள் விதிக்கப்பட்டிருந்தது.

**3.6 உள்ளூர் / வெளிநாட்டு திரைப்பட விழாக்களை நடாத்துதல்**

- சார்க் கலாசார நிலையத்தினால் 2013.05.25 ஆம் திகதி தொடக்கம் 2013.05.31 ஆம் திகதி வரை சார்க் திரைப்பட விழா நடாத்தப்பட்டிருந்தது.
- வியட்நாம் தூதரகத்தினால் 2013.10.19 ஆம் திகதி தொடக்கம் 2013.10.21 ஆம் திகதி வரை இலங்கை – வியட்நாம் திரைப்பட விழா நடாத்தப்பட்டிருந்தது.
- ஐரோப்பிய ஒன்றியத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட ஐரோப்பிய திரைப்பட விழா 2013.11.28 ஆம் திகதி தொடக்கம் 2013.12.06 ஆம் திகதி வரை கூட்டுத்தாபன அரங்கில் இடம்பெற்றிருந்தது.
- வெளிவிவகார அமைச்சினால் ஒழுங்கமைக்கப்பட்ட திரைப்பட விழா 2013.11.05 ஆம் திகதி தொடக்கம் 2013.11.12 ஆம் திகதி வரை நிகழ்த்தப்பட்டிருந்தது.
- 2014.10.25 ஆம் திகதி தொடக்கம் 2014.10.27 ஆம் திகதி வரை பொலிஷ் திரைப்பட விழா இடம்பெற்றிருந்தது.

## 3.7 தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியம்

தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் ஆளுநர்கள் சபையின் உறுப்பினர்கள் பின்வருமாறு:

திரு. அசோக சேரசிங்க , சட்டத்தரணி – தலைவர்

திரு.கருணாரத்ன , சட்டத்தரணி – வேலைப் பணிப்பாளர்

பேராசிரியர். ஆரியரத்ன அத்துகல - ஆளுநர்கள் சபை உறுப்பினர்

பேராசிரியர் . ரொலாண்ட் அபேபால – ஆளுநர்கள் சபை உறுப்பினர்

கலாநிதி. பிரணீத் அபேசுந்தர – ஆளுநர்கள் சபை உறுப்பினர்

திரு. சமந்த வெலிவீரிய , சட்டத்தரணி - ஆளுநர்கள் சபை உறுப்பினர்

திரு. விஜித் கணுகல - ஆளுநர்கள் சபை உறுப்பினர்

திருமதி.ரேணுகா பாலசூரியா - ஆளுநர்கள் சபை உறுப்பினர்

கலாநிதி . டி. வெங்கடேஷ்வரன் - ஆளுநர்கள் சபை உறுப்பினர்

திரு. கே. எம். றிஸ்வி - திறைசேரிப் பிரதிநிதி / ஆளுநர்கள் சபையின் உறுப்பினர்

செல்வி . பி.ஜி.பி. ரசன்ஜலி - ஆளுநர்கள் சபையின் உறுப்பினர்

## 3.8 வெளிநாட்டுத் தொடர்கள்/ ஆவணங்கள்/ வர்த்தக நிகழ்ச்சிகள் என்பனவற்றின் படப்பிடிப்பிற்கான அனுமதி

- 3 தொடர் திரைப்படங்கள், 42 ஆவணத் திரைப்படங்கள் என்பனவற்றிலிருந்தும் 5 வர்த்தக நிகழ்ச்சிகளிலிருந்தும் அங்கீகரிக்கப்பட்ட அறவீடுகள் விதிக்கப்பட்டுள்ளது.

## 3.9 திரைப்பட கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு

நம்பிக்கை பொறுப்பாளர் சபை உறுப்பினர்கள் பின்வருமாறு:

திரு. அசோக சேரசிங்க , சட்டத்தரணி – தலைவர்

திரு.கருணாரத்ன , சட்டத்தரணி – வேலைப் பணிப்பாளர்

திரு.வி.வாமதேவன் - நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை உறுப்பினர்

திருமதி.ரேணுகா பாலசூரியா - நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை உறுப்பினர்

திரு. சுடந்த திலகசிறி - நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை உறுப்பினர்

திரு. அர்ஜூன கமலநாத் - நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை உறுப்பினர்

திரு.றோகர் செனவிரத்ன - நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை உறுப்பினர்

திரு.சனத் குணதிலக - நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை உறுப்பினர்

திரு. லால் வீரசிங்க - நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை உறுப்பினர்

கலாநிதி. பிரணீத் அபேசுந்தர - பதில் உறுப்பினர்

**3.9.1 <u>ஓய்வூதியக் கொடுப்பனவு</u>**

ஓய்வூதியக் கொடுப்பனவு: ஒரு நபருக்கு ரூபாய்.2000/-

- ஜனவரி – ஜூலை ( 52 ஓய்வூதியக்காரர்களுக்காக) ரூபாய். 728,000.00
- ஓகஸ்ட் – நவம்பர் (51 ஓய்வூதியக்காரர்களுக்காக) ரூபாய். 408,000.00
- டிசெம்பர் (48 ஓய்வூதியக்காரர்களுக்காக) ரூபாய். 96,000.00

**3.9.2 <u>2013 ஆம் வருடப் பகுதியில் உரிமை மாற்றம் பெற்ற ஓய்வூதியக்காரர்கள்</u>**

- திரு. சைமன் பெர்னான்டோ
- திருமதி. லடிசியா பீரிஸ்
- திரு. திலக் கருணாரத்ன

3.9.3 இவ் வருட காலப்பகுதியில் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளருக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பிடமிருந்து 10 புதிய ஓய்வூதியக்காரர்களுக்காக ஓய்வூதியக்கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தது.

**3.9.4 <u>மரண நன்கொடைகளுக்கான கொடுப்பனவு</u>**

பின்வரும் ஓய்வூதியக்கார்கள் அவர்களது உரிமை மாற்றத்தின் பின்பு சட்ட உரிமையாளர்களுக்கு மரண நன்கொடைக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருக்கின்றது

- திரு .கே . ஜயசோம டயஸ் அபேசிங்க
- திரு. டி. சைமன் பெர்னாண்டோ

**4 <u>திரைப்படங்களின் இறக்குமதி</u>**

2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திரைப்பட இறக்குமதி விநியோகஸ்தாராக 32 இறக்குமதியாளர்கள் தாமாகவே பதிவுசெய்துள்ளனர்.

அதன் பிரகாரம், 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திரைப்படங்களை இறக்குமதி செய்வதற்கு 05 திரைப்படச் சுற்றுக்களூடாக பின்வரும் திரைப்படங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

- தமிழ்த் திரைப்படங்கள் – 53
- ஹிந்தித் திரைப்படங்கள் – 21
- ஆங்கிலத் திரைப்படங்கள் – 41

## 5 ஆளணி மற்றும் தாபனக் கட்டுப்பாடு

### 5.1 பணியாளர்

| | | |
|---|---|---|
| 2013.01.01 இல் பதவியணி | - | 148 |
| 2013 ஆம் வருடத்தில் புதிய ஆட்சேர்ப்பு | - | 03 |
| | | 151 |

### 2013 இல் பொறுப்பிலிருந்து விலகுவோர் எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| ஓய்வுபெற்ற வேலையாட்களின் எண்ணிக்கை | - | 07 |
| பதவி விலகிய வேலையாட்களின் எண்ணிக்கை | - | 01 |
| பதவியிலிருந்து விடுவிக்கப்பட்ட வேலையாட்களின் எண்ணிக்கை | - | 02 |
| சேவையிலிருந்து நீக்கபட்ட செய்யும் வேலையாட்களின் எண்ணிக்கை | - | 02 |
| உரிமை மாற்றங்கள் | - | 01 |
| பொறுப்பிலிருந்து விலகுவோரின் மொத்த எண்ணிக்கை | | 13 |
| நிரந்தர பதவியணி | - | 138 |

வேறு

| | | |
|---|---|---|
| ஒப்பந்த அடிப்படை | - | 04 |
| நாட் கொடுப்பனவு | - | 01 |
| பதில் கடமையாற்றல் | - | 02 |
| 2013.12. 31 இன் மொத்த பதவியணி | | 145 |

### 5.2 தாபனக் கட்டுப்பாடு மற்றும் பணியாளர் தேவைகளைப் பூர்த்திசெய்தல்

பணியாளர் கட்டுப்பாட்டின் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களை தொடர்ச்சியாக பின்பற்றுவற்கு பின்பற்றுவதற்கு பணியாளர் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றது. .

## 6 திரைப்படங்கள் / சினிமா விளம்பரங்கள்

### 6.1 இவ் வருட காலப்பகுதியின் வகிபங்கு

#### திரைப்படங்களை விளம்பரப்படுத்தும் செயற்பாடுகள்

- வஸ்சானயே சிஹினிய
- அபினிக்கரமன
- இகில்லேன்ன எய் டங்கலன்னே
- ராஜ கொரு

2013 ஆம் வருடத்தில் திரைப்படங்களை பார்வையிடுவதற்கு பொதுமக்கள் செயலாற்றுகைச் சபையின் ஊடகவியலாளர்கள் மற்றும் அதன் பொதுச் சபையின் உறுப்பினர்களுக்கான அனுமதிச் சீட்டுக்களை வழங்கல்.

**<u>ஊடக சுருக்கங்களை ஒழுங்கமைத்தல்</u>**

- தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் உள்ளூர் சினிமாவின் 66 வது ஆண்டு நிறைவு மற்றும் 41 ஆவது ஆண்டு நிறைவு என்பவற்றை குறிப்பதற்கு நிகழ்வின் ஊடக சுருக்கம் மற்றும் விளம்பர செயற்பாடுகள்.

- தேசத்திற்கு மகுடம் அபிவிருத்திக் கண்காட்சியில் திரைப்படக் கூட்டுத்தாபன பொருட் கண்காட்சி நிலையத்தின் விளம்பர செயற்பாடுகள்.

- பிரான்சில் வெசுல் சர்வதேச திரைப்பட விழாவில் விருதளிக்கப்பட்ட " ஒப நதுவ ஒப எக்க" எனும் திரைப்பட இயக்குநர் திரு. பிரசன்ன விதானகே அவர்களை வரவேற்பதற்கு பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட வைபவத்தின் ஊடக ஒருங்கிணைப்பு

- நியூயோர்க் நகர சர்வதேச திரைப்பட விழாவில் " சிறந்த நடிகர்" க்கான விருதைப் பெற்றுக்கொண்ட திரு.ஜெகத் சாமில்ல அவர்களை வரவேற்பதற்காக பண்டாரநாயக்கா சர்வதேச சர்வதேச விமான நிலையத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட வைபவத்தின் ஊடக ஒருங்கிணைப்பு

- "இகில்லேன்ன எய் தங்கலேன்ன" திரைப்படத்தின் ஊடக சுருக்க ஒழுங்கமைப்பு.

- கூட்டுத்தாபன சினிமா கலாசார பிரிவினால் நடாத்தப்பட்ட திரைப்படக் கலை டிப்ளோமாவிற்கான விளம்பரப்படுத்தற் செயற்பாடுகள்.

- கூட்டுத்தாபன அரங்கில் நடாத்தப்பட்ட வியட்நாம் திரைப்பட விழாவின் விளம்பர செயற்பாடுகள்

- டெல்லி சர்வதேச திரைப்பட விழாவில் ஆரம்ப கண்காட்சிக்காக பரிந்துரை செய்யப்பட்ட "ஸ்ரீ சித்தார்த்த கௌதம" எனும் திரைப்படத்தின் ஊடக சுருக்க ஒழுங்கமைப்பு

- வசத் சிறித' திரைப்படத்தில் ஊடக சுருக்கத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் 'விளம்பர செயற்பாடுகள் - வெற்றீரன் திரைப்பட இயக்குனர் திரு . வசந்த ஒபேசேகர அவர்களைப் பாராட்டுவதற்காக வசந்த ஒபேசேகர பாராட்டு வைபவம் நடாத்தப்பட்டது.

# 7. திரைப்படங்கள் கண்காட்சி

## 7.1 திரைப்படங்கள் கண்காட்சி

- 2013 ஆம் வருடத்தில் ரித்மா சுற்றுக்களின் கீழ் 60 சினிமா மண்டபங்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.
- 2013 ஆம் வருடத்தில் ரித்மா சுற்றுக்களின் கீழ் புதிதாக கட்டப்பட்ட புதிய இந்திரா சினிமா மண்டபம் அதன் செயற்பாடுகளை வெலிமடவில் ஆரம்பித்திருந்தது.

## 7.2 திரைப்படங்களின் வெளியிடுகை

- 60 சினிமா மண்டபங்களுக்கான திரைப்படங்கள் ரித்மா சுற்றுக்கள் வெளியிடப்பட்டிருந்தது.

- 2013 ஆம் வருட காலப்பதியில் ரித்மா சுற்றுக்களினால் ஏனைய சுற்றுக்களின் ஒத்துழைப்புடன் திரைப்படங்களை வெளியிடுவதற்கு அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- ரித்மா சுற்றினால் 3 சிங்கள திரைப்படங்களை வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- ஏனைய சுற்றுக்களின் ஒத்துழைப்பில் ரித்மா சுற்றுக்களினால் விநியோகத்தர்களால் இறக்குமதி செய்யப்பட்ட 11 தமிழ் திரைப்படங்கள் 2013 ஜனவரி மாதத்திலிருந்து வெளியிடப்படிருந்நது.

  ( கூட்டுத்தாபனச் சுற்றிற்கு ஒதுக்கப்பட்ட அனுமதிப் பங்கிலிருந்தும் அதேபோல் ஏனைய சுற்றுக்களிற்கு ஒதுக்கப்பட்ட அனுமதிப் பங்கிலிருந்தும் திரைப்படங்களை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் ரித்மா சுற்றினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 7.3 திரைப்பட வாடகை

- ஏனைய சுற்றுக்களிற்கு ரித்மா சுற்றுக்களினால் ஏனைய சுற்றுக்களிற்கு வாடகைக்கு விடப்பட்ட திரைப்படங்களுக்கான வாடகைப் பெறுமதி பின்வருமாறு விதிக்கப்பட்டிருந்தது (செப்டெம்பர், 2013 ஆம் ஆண்டு வரை)

எல்எப்டி ரூ. 4,440,326.73

எம்பிஜ ரூ. 1,097,541.82

சிஈஎல் ரூ. 7,820,682.06

ஈஏபி ரூ. 373,859.31

- ஏனைய சுற்றுக்களிற்கு வாடகைக்கு விடப்பட்ட திரைப்படங்களுக்காக ரித்மா சுற்றுக்களினால் பின்வரும் வாடகைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

எல்எப்டி ரூ. 2,593,695.79

எம்பிஜ ரூ. 8,349,229.01

சிஈஎல் ரூ. 17,734,549.35

ஈஏபி ரூ. 31,999,838.51

2013, சனவரியிலிருந்து செப்டம்பர் வரை ஈட்டப்பட்ட சேவைக் கட்டணம் ரூபாய் 17,345,268.84.

- 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வேறுபட்ட சங்கங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோருக்கான உதவியின் பொருட்டு சலுகைப் பெறுமதி அடிப்படையில் கண்காட்சிக்கென திரைப்படங்கள் வழங்கப்பட்டிருந்தது.
- சலுகைப் பெறுமதி அடிப்படையில் பொலிஸ் பயிற்சி கல்லூரிகளுக்கும் மற்றும் இராணுவப்படை தளங்களுக்கும் திரைப்படங்களை வழங்குதல்.

## 08. உள்ளக கணக்காய்வுகள்

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும், கணக்காளர் நாயகத்தின் வழிகாட்டுதலின் கீழும் உள்ளக கணக்காய்வு நடாத்தப்பட்டிருந்தது.

## 09. சினிமா கலாசார மற்றும் கல்விப் பிரிவு

### 9.1 திரைப்படக் கலையில் டிப்ளோமா

- திரைப்படக் கலையில் டிப்ளோமா - 2012 ஆம் ஆண்டின் இறுதிப் பரீட்சை மற்றும் மதிப்பீட்டு முடிவுகள் வழங்குதல்.
- 2014 ஆம் ஆண்டு திரைப்படக்கலையில் டிப்ளோமாவினை தொடங்குவதற்கான ஆரம்பகட்ட ஏற்பாடுகள்

**9.2.** சினிமா பாராட்டுகை நிகழ்ச்சித்திட்டங்கள் (2013 ஆம் ஆண்டில் " வாழ்க்கைக்கான சினிமா " எனும் கருப் பொருளின் கீழ் 05 சினிமா பாராட்டுகை நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டது)

- வரகாபொல தொழில்நுட்பக் கல்லூரி
- பண்டாரநாயக வித்தியாலயம் , மீரிகம
- வயம்ப பல்கலைக்கழகம்
- டட்லி சேனநாயக்கா மத்திய மகா வித்யாலயம்
- குற்றப் பதிவுகள் பிரிவு –டொறிங்டன்

9.3 **திரைப்படங்களின் கண்காட்சி** **கண்காட்சிகளின் எண்ணிக்கை**

| | |
|---|---|
| • கைதிகள் மறுவாழ்வு நிகழ்ச்சித்திட்டமொன்றில் சிறைச்சாலைக் கைதிகளுக்கான திரைப்படக் கண்காட்சி. | 01 |
| • "இரபடு வசந்த உதனய " - 2013 | 01 |
| • லும்பினி கல்லூரி –கொழும்பு | 01 |
| • ஜெயந்தி சிறுவர் இல்லம் – கொழும்பு 07 | 01 |
| • ஸ்ரீ பெரகும்ப ரஜ மகா விகாரை - லுணுகம | 02 |
| • குற்றப் பதிவுகள் பிரிவு –கொழும்பு 07 | 01 |
| • ஸ்ரீ தர்ம வித்யாலயம், லபுதுவ – காலி | 02 |
| • ஸ்ரீ தர்மலோக வித்யாலயம் –கெலனிய | 02 |
| • சோமவீர சந்திர ஸ்ரீ வித்யாலயம் – பிலியலந்தல | 01 |
| திரைப்பட கண்காட்களின் மொத்த எண்ணிக்கை | 12 |

9.4 **திரைப்பட சஞ்சிகை**

- 10 பிரசுரங்களை உள்ளடக்கிய கல்விசார் பத்திரிகை ஒன்றாக திரைப்பட சஞ்சிகையின் 4 மாதாந்த தொகுதிசெப்டெம்பர் – டிசெம்பர் வரை வெளியிடப்பட்டிருந்தது. இச் சஞ்சிகைகளில் 1000 பிரதிகள் அச்சிடப்பட்டிருந்தது.

9.5 **குறுந் திரைப்பட விழா**

- இரண்டு பயிற்சி பட்டறைகள் மற்றும் போட்டிகள் நடாத்தப்பட்டிருந்தது. 3 வெற்றியாளர்களும் மற்றும் குறுந் திரைப்பட வகுதியில் சிறப்பு விருது பெற்ற ஒருவரும் தெரிவு செய்யப்பட்டிருந்தார்கள். அதேவேளை ஆவணத் திரைப்பட வகுதியில் ஒரு வெற்றியாளரும் தெரிவு செய்யப்பட்டிருந்தார். உரிய கற்கைநெறிகளில் வெற்றியாளர்களுக்கான சான்றிதழ் மற்றும் விருது வழங்கும் நிகழ்வு நடாத்தப்படும்.

9.6 **வெளியீடுகள்**

- சிங்கள சினிமாவின் 66 ஆவது ஆண்டு நிறைவு மற்றும் இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 41 ஆவது ஆண்டு நிறைவு ஆகிய நிகழ்வுகளில் தற்செயலாக கூட்டுத்தாபன வெளியீடொன்றாக கலாநிதி. உதித கயஷன் குணசேகரவினால் தொகுக்கப்பட்ட "லெஸ்டர், சினிமா லெஜன்ட்" வெளியிடப்பட்டிருந்தது.

9.7 **ஏனையவை**

- அம்பாறையிலுள்ள ஹார்டி உயர் தொழில்நுட்ப நிறுவகத்தில் 2013 ஆம் ஆண்டிற்கான தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி கண்காட்சி வெற்றிகரமாக நடாத்தப்பட்டிருந்தது.

10. **உள்ளூர் விநியோகஸ்தர்கள், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி**

1. திரையரங்கு மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்களின் தேவைகளை திருப்திப்படுத்துவதற்கு தொழில்நுட்ப உபகரணம், காகிதாதிகள் மற்றும் அலுவலக உபகரணம் வழங்கல்.
2. சேவைகள் மற்றும் பராமரிப்பின் ஏற்பாட்டில் சொத்துக்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்சது தொடர்பில் தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ளல்.
3. விளம்பரப்படுத்துதல், சினிமாக் கலாசாரப் பிரிவு ஆகியனவற்றிற்காக ரூபா 369,900/- பெறுமதியான விநியோகப் பொருட்கள், நுழைவுச் சீட்டுகள் மற்றும் 05 கணனிகள் கொள்வனவு.

4. பின்வரும் குறிப்பிட்ட நடவடிக்கை களில் 2013/ 2014 ஆம் ஆண்டிற்கான சுகாதார மற்றும் பாதுகாப்பு சேவைகள் ஆகியவற்றுக்கான விநியோகஸ்தர்கள் தெரிவு.

## 11. <u>திரைப்படக் கூடம்</u>

### 11.1 <u>வகிபங்கு</u>

- உள்ளூரில் தயாரிக்கப்படும் திரைப்படங்களையும் திரைப்பட கூட்டுத்தாபனத்தின் அனுமதியில் இறக்குமதி செய்யப்படுகின்ற திரைப்படங்களையும் ஏற்றுக்கொண்டு பதிவு செய்தல்.

- தர பரிசோதனையின் ஒன்றின் பின் பொது செயலாக்க சபைக்கு திரைப்படங்களை ஒப்படைத்தல், தர அறிக்கைகளை வழங்குவதனூடாக திரைப்படங்களை இறக்குமதியாளர்/ தயாரிப்பாளர்/ விநியோக சுற்றுகளிற்கு மீண்டும் கையளித்தல் அல்லது பொது செயலாக்க சபையின் அனுமதியின் பேரில் திரையரங்குகள் மத்தியில் திரைப்படங்களை விநியோகம் செய்தல் போன்றவற்றினூடாகவும் கூட்டுத்தாபனங்களிற்கு வருமானம் பெறுவதற்கான மூலம் ஒன்றினை திறத்தல்.

  திரைப்பட தர கட்டுப்பாட்டினூடாக கிட்டத்தட்ட ரூபாய் 21 லட்சம் ஈட்டப்பட்டுள்ளது.

- உரிய திரையரங்குகளுக்கு கூட்டுத்தாபன சுற்றினால் நிரற்படுத்தப்பட்ட திரைப்படங்கள் மற்றும் திரைப்பட முன்னோட்டம் போன்றவற்றை விநியோகித்தல் மற்றும் மீளப்பெறல்.

- திரைப்படக் கூடத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து திரைப்படங்களையும் மீள பரிசோதித்தல் மற்றும் அவற்றை அலுமாரிகளில் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தல்.

- அலுமாரிகளில் களஞ்சியப்படுத்தப்பட்ட திரைப்படங்களை நேரத்திற்கு நேரம் பரிசோதித்தல்.

- மீள் திரையிடலுக்கு பொருத்தமான பழைய திரைப்படங்களை திரைப்படக் கூடத்தில் மீள உருவாக்குதல் மற்றும் அதனால் கூட்டுத்தாபனத்திற்கு வருமானமொன்றினை ஈட்டுதல்.

- மீள் திரையிடலுக்கு பொருத்தமான மூன்று திரைப்படங்களை மட்டும் தக்கவைக்கும் அவர்களின் உரிமையாளர்களுக்கு கூடத்திலுள்ள அனைத்து திரைப்படங்களையும் கையளிப்பதன் மூலம் திரைப்பட கூடத்தின் பராமரிப்பை ஒழுங்குமுறைப்படுத்தல்.

- உடன்படிக்கை காலப்பகுதியை கடந்த திரைப்படங்களையும் பழுதடைந்த திரைப்படங்களையும் அவற்றின் உரிமையாளர்களுக்கு அறிவித்ததன் பின்னர் எரிப்பதற்கும் அகற்றுவதற்கும் அதேபோல எரித்தலில் மிஞ்சியுள்ள வெள்ளியினை விற்பதனூடாக மேலதிக வருமானத்தை ஈட்டுவதற்கும் அளவீடுகளைச் செய்தல்.

- 132 சிங்கள, தமிழ், ஆங்கில மற்றும் இந்தி திரைப்படங்கள் இவ் வருடப்பகுதியில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

1. **சட்ட நடவடிக்கைகள்**

12.1 **<u>வகிபங்கு</u>**

- கூட்டுத்தாபனம் திறத்தவர் ஒருவராக வரும் வழக்குகளில் கூட்டுத்தாபனத்தின் சார்பாக நீதிமன்றத்தின் முன் தோன்றுதல் மற்றும் பதிலிப் பத்திரத்தை சமர்ப்பித்தல்.
- தொழில் திணைக்களத்தில் தொழிலாளர் பிரச்சினைகளுக்காக கூட்டுத்தாபனத்தின் சார்பாக தோன்றுதல்.
- கூட்டுத்தாபனத்தின் சார்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு முன் தோன்றுதல்.
- கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படும் திரைப்பட தயாரிப்பு, இறக்குமதி, விநியோகம், திரைப்பட தயாரிப்பிற்கான கடன் மற்றும் சேவைகளை வழங்குதல், கலையக சேவைகள், அச்சுப் பிரதிகள், உப தலைப்பிடல் மற்றும் விளம்பரப்படுத்துகை என்பவை தொடர்பான அனைத்து சட்ட உடன்படிக்கைகளை ஒப்பமிட்டு உருவாக்குதல்.
- துணைச் சேவைகள், பொருட்கள் கொள்வனவு, கட்டட நிர்மாணம் மற்றும் ஏனையவைகளை பெற்றுக்கொள்ளும் சட்ட உடன்படிக்கைகளை உருவாக்குதல்.
- தேசிய திரைப்பட கூட்டுத்தாபன சட்ட திருத்தம்
- கூட்டுத்தாபனத்தின் உள்ளக ஒழுக்க விசாரணைகளை கையாளுதல்.
- தேவை ஏற்படும் பட்சத்தில் கூட்டுத்தாபனத்தின் எந்த பிரிவினாலும் முன்கொணரப்படும் தினசரி சட்ட சிக்கல்களுக்கான சட்ட ஆலோசனை வழங்குதல்.

12.2 **இவ் வருட காலப்பகுதியில் கையாளப்பட்ட வழக்குகள் விபரம்**

- மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கு இல: 590/2007
- மாவட்ட நீதிமன்றம் - கொழும்பு வழக்கு இல: டிஎம்ஆர் 1897/11
- மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கு இல: 870/99
- மாவட்ட நீதிமன்றம் - கொழும்பு வழக்கு இல: டிஎஸ்பி 18/2012
- மாவட்ட நீதிமன்றம் - கொழும்பு வழக்கு இல: 97659/5/11
- உயர் நீதிமன்ற வழக்கு இல: எஸ்சி (எப்ஆர்) 475/2012
- மாவட்ட நீதிமன்ற வழக்கு இல: டிஎம்ஆர் 1126/2012 – இவ் வழக்கு 4 சினிசிட்டி திரையரங்குகளிலிருந்து கூட்டுத்தாபனத்தின் நம்பிக்கை பொறுப்பு தீர்வை செலுத்தாமை தொடர்பாக கோப்பிடப்பட்டது.
- மாவட்ட நீதிமன்ற வழக்கு இல: டிஎம்ஆர் 2576/2012 – 'உடுகன்யாமய' திரைப்பட பணிப்பாளருக்கு எதிராக இத் திரைப்பட தயாரிப்பிற்கென பெற்றுக்கொண்ட கடனை மீளச் செலுத்தாமைக்காக கோப்பிடப்பட்டது.
- வர்த்தக மேல் நீதிமன்றம், கொழும்பு வழக்கு இல: எச்சி சிவில் 42/2012/ஐபி – 'மெளஸ்' எனும் சிங்களத் திரைப்படத்தில் முதலிடப்பட்ட 135,000/- அமெரிக்க டொலர் பெறுமதியினை மீளப் பெறுவதற்கு கூட்டுத்தாபனம் திறத்தவராக்கப்பட்டு மூன்று இஸ்ரேல் நாட்டினரால் தாக்கல் செய்யப்பட்ட ஒரு வழக்கு.
- மாவட்ட நீதிமன்றம் - கொழும்பு வழக்கு இல: டிஎஸ்பி/00026/2013, டிஎஸ்பி/00027/2013, டிஎஸ்பி/00028/2013, டிஎஸ்பி/00029/2013, டிஎஸ்பி/00030/2013 – கூட்டுத்தாபன தலைவரினால் திரைப்பட விநியோகம் தொடர்பாக 2012.12.30 ஆம் திகதியிடப்பட்ட கடித இல. என்எப்சி/100/01/04 எனும் அவரது கடிதம் மூலம் செய்யப்பட்ட அமுலாக்கத்தை தடுப்பதற்காக கலாநிதி. சோமாரத்ன திசாநாயக உள்ளடங்கலாக 5 முறைப்பாட்டாளர்களால் பெறப்பட்ட இடைக்கால தடை உத்தரவு (திரைப்பட பிரதிகளின் எண்ணிக்கையினை 35 இற்கு மட்டுப்படுத்தல்)
- மேன்முறையீட்டு நீதிமன்றம் (ஆணை) விண்ணப்ப இல: 144/2013 – அங்கீகரிக்கப்பட்ட 35 பிரதிகள் எனும் மட்டுப்பாட்டை மீறி திரைப்பட பிரதிகளை வெளியிடுவதற்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்திற்கு எதிராக வரையறுக்கப்பட்ட இலங்கை சினிமா கலைஞர்கள் சங்கம் மற்றும் திரைப்பட இயக்குநர்கள் கழகம் என்பனவற்றால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

- தொழில் நியாய சபை வழக்கு இல: 13-14-2013

  திரு. பிரதிப் லங்கா தர்மவிக்ரம அவர்களினால் சட்ட விரோத மற்றும் நியாயமற்ற வழிமுறைகளினூடாக சேவை நீக்கப்பட்டதிலிருந்து அவரை மீள நியமிக்குமாறு கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

- மாவட்ட நீதிமன்றம் வழக்கு இல: 2146/13 டிஎம்ஆர்

  தேசிய திரைப்பட கூட்டுத்தாபனத்தினால் அருமோசம் வெஹி' எனும் திரைப்பட இயக்குநருக்கு எதிராக கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட கடன் மற்றும் அதன் வட்டி என்பனவற்றை மீளப் பெறுவதற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

**தொழில் திணைக்களத்தின் விசாரணைகள்:**

- கூட்டுத்தாபன உத்தியோகத்தர் – திரு. டபிள்யூ. எஸ். பொன்சேகா
- தொழில் அலுவலகம் முறைப்பாட்டு இல – ஐஆர்/15/19/2012 - தேசிய திரைப்பட கூட்டுத்தாபன தொழிலாளர்கள் சங்கம் – திரு. சமித டிசாநாயக்க
- தொழில் அலுவலகம் முறைப்பாட்டு இல – ஐஆர்/15/20/2012 – திரு. கே. ஜி. டி. பண்டுசேன
- தொழில் அலுவலகம் முறைப்பாட்டு இல – சிசிசி/எல்/டி/719/2012 – திரு. ரி. எஸ். பிரசன்தா பீரிஸ்
- தொழில் அலுவலகம் முறைப்பாட்டு இல – 490/2013 செல்வி. எச்.பி. சுனேத்ரா (கூட்டுத்தாபனத்தின் ஒப்பந்த அடிப்படையிலான ஒரு தொழிலாளி) இவ் வழக்கு முதல் நாள் கேட்பின் போது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**1) நிதிச் செயற்பாடுகள்**

**13.1** 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை பின்வருமாறு இருக்கின்றது.

| | 2013<br>ரூபாய் | 2014<br>ரூபாய் |
|---|---|---|
| கண்காட்சியிலிருந்து ஈட்டப்பட்ட வருமானம் | 35,278,807.00 | 37,648,738.00 |
| சினிமா காபன் விற்பனை | 1,764,268.00 | 2,434,082.00 |
| காகிதாதிகள் | 1,606,207.00 | 1,555,394.00 |
| உதிரிப் பாக விற்பனை | 356,118.00 | 132,717.00 |
| சினிமா விளம்பரங்கள் | 300,308.00 | 809,832.00 |
| கலையகம் | 2,269,993.00 | 3,851,249.00 |
| தேறிய இலாபம் | 11,622,173.00 | 17,820,214.00 |

**13.2** 2012 ஆம் ஆண்டில் விற்னை வருமானமானது ரூபாய் 46.4 மில்லியனாக இருந்த பொழுது 2013 ஆம் வருடத்தில் அது ரூபாய் 41.5 மில்லியனாக இருந்துள்ளது. 2013 ஆம் ஆண்டின் வருமானம் ரூபாய் 4.9 மில்லியனால் வீழ்ச்சியடைந்திருந்தது. இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணம் திரைப்படக் காட்சியிலிருந்தும் மற்றும் கலையகத்திலிருந்தும் ஈட்டப்பட்ட வருமானம் குறைவாக இருந்தமை ஆகும்.

அத்துடன், விநியோகம் மற்றும் உபகரணம், பழுது பார்த்தலும் பராமரித்தலும், தேய்மானம், போக்குவரத்து, தொடர்பாடல் என்பனவற்றிற்கான அதிகரித்த செலவீனத்தின் காரணமாக இந்த வருடத்தின் மொத்த செலவீனம் ரூபாய் 5.1 மில்லியனால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த வருட காலப்பகுதியில் மீண்டும் மீண்டும் எழுந்த செலவீனத்தின் காரணமாக திறைசேரியிடமிருந்து ரூபாய் 69.9 மில்லியன் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. முன்னய ஆண்டில் தேறிய இலாபம் ரூபாய் 17.8 மில்லியனாக இருந்துள்ள போது இந்த வருட தேறிய இலாபம் ரூபாய் 11.6 மில்லியனாக இருக்கின்றது.

**13.2.2** பொது திறைசேரியிடமிருந்து அனுமதிக்கப்பட்ட மூலதனத்திற்கு புறம்பான செலவீனமாக ரூபாய் 7 மில்லியன் மட்டுமே பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

**13.3** **<u>உற்பத்திக் கடன் மற்றும் திரையரங்குக் கடன்</u>**

கண்காட்சி, விளம்பரம் அதேபோல் திரையரங்குகளை நவீனமயப்படுத்தல் போன்ற அச்சுத் திரைப்பட பிரதிகளுக்காக இந்த வருட காலப்பகுதியில் கடன் வசதிகள் வழங்கப்பட்டுள்ளது. திரைப்பட தயாரிப்பிற்காக வழங்கப்பட்ட ரூபாய் 13.1 மில்லியன் கடன்கள் ரூபாய் 15.5 மில்லியனால் அதிகரிக்கப்பட்டிருக்கின்ற பொழுது 2012 ஆம் ஆண்டில் திரைப்பட தயாரிப்பிற்காக வழங்கப்பட்ட கடன்கள் ரூபாய் 94.4 மில்லியன் 2013 ஆம் ஆண்டில் ரூபாய் 91.1 மில்லியனிற்கு குறைக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களிற்காக அச்சுப் பிரதி மற்றும் விளம்பரக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டில் ரூபாய் 107.4 மில்லியனாக பெறக்கூடிய கடன்களின் மீதி தவணைக் கடன்களாக திரையரங்குகளினால் செலுத்தப்பட்டுக் கொண்டிருப்பதனால் ரூபாய் 106.6 மில்லியனுக்கு குறைக்கப்பட்டுள்ளது.

**13.3.1** திரைப்பட வாடகைக் கடன்பட்டோரின் மீதியினை திரையரங்குகள் மீள செலுத்திக்கொண்டிருப்பதால் பெறப்படும் தொகை காரணமாக ரூபாய் 7 மில்லியனால் குறைக்கப்பட்டுள்ளது.

**13.4** **<u>முதலீடுகள்</u>**

இவ் வருட இறுதியில், நிரந்தர வைப்பில் ரூபாய் 114.4 மில்லியனாகவும், திறைசேரி உண்டியலில் ரூபாய் 76.4 மில்லியனாகவும் மற்றும் றீப்போ வைப்பில் ரூபாய் 33.7 மில்லியனாகவும் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்சொல்லப்பட்டவற்றிற்கு புறம்பாக திரையரங்குகளிலிருந்து

பெற்றுக்கொள்ளப்பட்ட பாதுகாப்பு வைப்புக்கள் ரூபாய் 2.4 மில்லியனாக இருந்துள்ள பொழுது கூட்டுத்தாபன தொழிலாளர்களின் ஊழிய சேமலாப நிதியம் ரூபாய் 33.2 மில்லியனாக இருந்துள்ளது.

**13.5 <u>ஊழியர்களது சேமலாப நிதியத்திற்கு ஒதுக்கீடுகள்</u>**

கூட்டுத்தாபனத்தின் ஊழியர் சேமலாப நிதியத்திற்கான இந்த வருட மொத்த ஒதுக்கீடுகள் ரூபாய் 33.2 மில்லியனாகும்.

**13.6** திறைசேரி மானியங்களிலிருந்து தொழிலாளர்களுக்கான ஊதியம் செலுத்தப்படுவதோடு அதனால், வருமான வரிக்கான ஒதுக்கீடுகள் மேற் கொள்ளப்படாதுள்ளது.

**14 <u>கலையகம்</u>**

டலுகமவிலுள்ள சரசவி கலையகத்தின் பிரதான செயற்பாடாக தயாரிப்பிற்கு முன்னதான நிலையில் தொழில்நுட்ப சேவைகளுடன் திரைப்படங்களை எளியதாக்குதல்.

இந்த வருட காலப்பகுதியிலும் உள்ளூர் திரைப்பட தயாரிப்பாளர்களுக்கு பின்வரும் பகுதிகளில் தொழில்நுட்ப சேவைகள் மற்றும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளது.

1. ஒலிப் பிரிவு ( எண்ணியல் )
2. பிறள் வரிசை செவ்வையாக்கற் பிரிவு ( எண்ணியல் )
3. கறுப்பு மற்றும் வெள்ளைக் கூடம்
4. திரைப்படக் கூடம்
5. திரைப்பட மற்றும் தொலைக்காட்சி பதிவுக் கலையகம்

**14.1 <u>ஆற்றப்பட்ட செயற்பாடுகள்</u>**

1. இந்த வருட காலப் பகுதியில் கிட்டத்தட்ட 23 உள்ளூர் திரைப்படங்களுக்காகவும் சரசவி கலையகம் தொழில்நுட்ப சேவையினை வழங்கியுள்ளது.

2. படப்பிடிப்பிற்கான வசதிகள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் என்பனவை உள்ளக கலையரங்கு, கலையக முன்னரங்கு அதேபோல தோட்டம் ஆகிய இடங்களில் வழங்கப்பட்டுள்ளது. கவனத்திற்கொள்ளப்பட்ட காலப்பகுதியின் 17 தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் திரைப்படங்கள் உள்ளடங்கிய வர்த்தகங்கள் என்பனவற்றிற்கான வசதிகள் இருந்துள்ளது.

3. சர்வதேச தரத்திற்கேற்ப சுற்றுப்புற ஒலிக் கலப்பினை எளிமையாக்குவதற்கு ஒலிப் பிரிவின் ஒரு கலையகத்தின் உபகரணங்களை நவீனப்படுத்தி நிறுவுதல்.

   இந்த திட்டத்திற்கான பூர்வாங்க வரைபு தயார்செய்யப்பட்டுள்ளது. இந்திய டோல்பை ஒலி ஆலோசகரான திரு. வி. கிசோர் குமார் இத் திட்டத்திற்கான

தொழில்நுட்ப ஆலோசகராக செயற்படுகிறார். தற்போதய தலைவர் தொழில்நுட்ப குழு ஒன்றை நியமித்துள்ளதுடன் இக் குழு திரு. கிசோர் குமாருடனான ஆலோசனையின் இறுதி வரைபுகளை முடிவுறுத்தம் செய்துள்ளது. ஒலிக் கலையகத்தின் சிறிய கலையகம் (விஜயா குமாரதிங்க கலையகம்) பணிப்பாளர் குழுவின் அங்கீகாரத்தின் பேரில் நவீனப்படுத்துகைக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளது. அளவுப் பட்டியல் மற்றும் கேள்விப் பத்திர ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளதுடன் சீரமைப்பிற்காகவும் தேவையான கொள்வனவிற்காகவும் கேள்விப் பத்திரங்கள் கோரப்பட வேண்டும்.

4. எண்ணியல் செவ்வையாக்கற் பிரிவு மற்றும் தொழில்நுட்ப ரீதியாக கலையகத்தை இற்றைப்படுத்தல் என்பனவற்றிற்கான உபகரணக் கொள்வனவு.

   திரைப்படமொன்றை அச்சிட முன் வர்ணங்களை சரிபார்ப்பதில் கவனம் செலுத்துவதும் மற்றும் அடையாளப்படுத்தப்பட்டுள்ள உருவங்களை உண்டாக்கும் கணனிகளை தோற்றுவிப்பதற்குமான செவ்வையாக்கற் பிரிவினை இற்றைப்படுத்துவதில் கொள்வனவிற்குத் தேவைப்படும் உபகரணகங்களை தொழில்வாண்மை தொழில்நுட்ப குழுவொன்றின் ஆலோசனையில் வழங்கப்பட்ட விபரக்கூற்றுக்களின் உருவாக்கத்தின் பின் கொள்வனவு செய்வதற்கு கேள்விப்பத்திர கோரல் எதிர்பார்க்கப்படுகின்றது.

5. தேசிய திரைப்பட கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை நிறுவனம் என்பனவற்றில் நடத்தப்படுகின்ற ஒலி வடிவமைப்பு செயல்முறை அமர்வு கலையகத்தை எளிமைப்படுத்தியுள்ளது.

6. முன்பு பழைய கூடத்தில் களஞ்சியப்படுத்தப்பட்ட எதிர்மறை மற்றும் நேரான திரைப்படப் பிரதிகளின் களஞ்சியப்படுத்தலை தரப்படுத்தும் பொருட்டு கறுப்பு மற்றும் வெள்ளைக் கூடத்தில் இரு அறைகளை செப்பனிடல்.

   இந்த திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் திரைப்பட கூடத்திலுள்ள அனைத்து திரைப்படங்களும் முறைப்படி இந்த இரு அறைகளில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. வளிச்- சீராக்கி மற்றும் ஈரப்பதன் நீக்கி அகியன நிறுவப்பட்டுள்ளதுடன் அவை இரவு பகலாக செயற்பாட்டில் இருக்கின்றது. அதன் பிரகாரம் அறைகளிலுள்ள சூடு சாரீரப்பதன் கட்டுப்பாட்டினுள் இருந்துகொண்டிருக்கின்றது.

7. கலையகத்தின் நுழைவாயிலை வடிவமைத்தல் மற்றும் நிர்மாணித்தல் என்பனவற்றுடன் நுழைவுப்பாதையினையும் மற்றும் நுழைவாயிலுக்கு அடுத்து விற்பனைகள் வெளிவழி ஒன்றினையும் நிர்மாணித்தல்.

   இந்த செயற்திட்டம் கூட பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

8. கலையகத்தின் சிற்றுண்டிச்சாலை ஒன்றின் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது ஆனாலும் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை.

9. உள்ளக மற்றும் வெளியக கட்ட்டங்களுக்கு வர்ணம் பூசுதலும் பிரதான முன்றல் தரையின் டரசோவினை வெட்டி மினுக்குதல்.

## 14.2 கலையக தொழில்நுட்ப சேவைகளைப் பெற்றுக்கொண்ட திரைப்படங்கள் – 2013

1. ஆவண நிகழ்ச்சிகள் ( இலங்கை தேசிய கூட்டுத்தாபனம்)
2. *ரஞ்ச*
3. *வோஸ் டன்டு ரவய*
4. *பரவர்த்தன*
5. *வெஸ் வலகத் தருனிய*
6. *பிலிகந்த்துரவ*
7. *கோ கான பொகுண*
8. *பரபுர*
9. ஆவண நிகழ்ச்சிகள் ( களனிப் பல்கலைக்கழகம்)
10. *சத்தியகட மற்ற ரட்ட பரதென்ன*
11. *கண்டுலக அபேக்சா*
12. *பிரித்தி அன்ட் ஜோய்*
13. *எட்ட லனுவ டெம்ம கோடிய*
14. *அடர பூஜாசனே*
15. வர்த்தகம் – பின்னணிக் குரலை பதிவு செய்தல்
16. *குமாரி கன்யவி*
17. *கியூ சர சர*
18. *பற்றிபான*
19. *ஒலுவ ஜப்பான் கண்ட ஜெர்மன்*
20. *சுப்பிரி அந்தரே*
21. *சபன்டன*
22. *டாக்டர் நவரியன்*
23. *டபின் ரபிள்*

## 14.3 <u>ஒளிப்பதிவு நாடா சேவைகளைப் பெற்றுக்கொண்ட திரைப்படங்கள்/ முன்னோட்டங்கள்</u>

குறுந் திரைப்படங்கள் – 1. வர்த்தகம்

2. படம்

## 14.4 <u>கலையகத்தில் திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் படப்பிடிப்பு – 2013</u>

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

1. இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் – *"சுவ நென"* வினா விடை நிகழ்ச்சி
2. வரையறுக்கப்பட்ட இன்பிலேம் ( தனியார்) – டன்டெக்ஸ் தொலைக்காட்சி வர்த்தகம்
3. சந்தரு திரைப்படங்கள் – *"அஸகாவே மய"* திரைப்படம்
4. சுடம்ச திரைப்படங்கள் –*'பற்றிபகன'* திரைப்படம்
5. தெரன 'சூர கோவிய' நிகழ்ச்சி
6. தெரன – லிற்றில் ஸடார்
7. வரையறுக்கப்பட்ட இன்பிலேம் (தனியார்) – விம் தொலைக்காட்சி வர்த்தகம்
8. யூனிவர்சல் லங்கா கிரியேசன் - 'சூரயோ' திரைப்படம்
9. திரி இன் ஒன் - இறுவட்டு வெளியீடு
10. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் – ரட்ட வீருவோ டலன்ட் ஸ்டார்
11. ஒளிப்பதிவு குழாம் – தம்ரோ தொலைக்காட்சி வர்த்தகம்
12. வரையறுக்கப்பட்ட ஈ. ஏ. பி நெற்வேக் (தனியார்) – சுவர்ணவாஹினி டோக்கியோ சிமென்ட் அனைத்து அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான வினா விடை – 2013
13. படக்காட்சி குழாம் – சுப்பிரி அந்தரே திரைப்படம்
14. தெரன - டேல் கலையகம்
15. தேசிய இளைஞர் பேரவை – 'சிகினய' நிகழ்ச்சி
16. உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறி – செயற்பாட்டு பகுதி
17. உலகலாவிய அடிமட்ட கம்பனி – ஐஎப்ஏடி – ஆவணம்

### 14.5 இவ் வருட காலப்பகுதிக்கான கலையக பற்றுச்சீட்டு

| | ரூபாய். |
|---|---|
| ஒலிப் பிரிவு | 1,585,052.94 |
| பிறள் வரிசை செவ்வையாக்கற் | 471,149.09 |
| கறுப்பு மற்றும் வெ ள்ளை ஆய்வு கூடம் | 4,582.40 |
| படப்பிடிப்பு | 2,504,728.21 |
| மொத்த பற்றுச்சீட்டு | 4,565,512.64 |

## 15 விசாரணைகள்

### 15.1 இந்த வருடம் முழுவதும் நிகழ்த்தப்பட்ட நிகழ்ச்சிகள்

குறிப்பிடப்பட்ட திரையிடல்களின் எண்ணிக்கை - 1153

மீள அறவிடப்பட்ட கடன் - ரூபாய். 2,896,078.48

விநியோகிக்கப்பட்ட பற்றுச் சீட்டுக்களின் பெறுமதி - ரூபாய். 1,535,050.00

* ‘சினிமா வசந்தய’ என்றழைக்கப்படும் புதிய திட்டம் ஒன்று தற்போதய தலைவரான சட்டத்தரணி திரு. அசோகா சிரசிங்கே அவர்களின் கருத்தில் விசாரணைப் பிரிவால் அமுலாக்கம்.

இந்த திட்டத்தின் கீழ்,

- புதிய திரையரங்குகளின் நிர்மாணித்தல்
- மூடப்பட்ட திரையரங்குகளை மீளத் திறத்தல்
- திரையரங்குகளை நிர்மாணிப்பதற்கு நிலம் மற்றும் கட்டடங்கள் பற்றிய தகவல் திரட்டுகை நடாத்தப்பட்டது.

### 15.2 புதிய திரையரங்குகளின் கட்டுமானம்

2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 4 புதிய திரையரங்குகள் கட்டப்பட்டுள்ளன.

- சினில்மா சினிமா - அலவ்வ
- அமிற்றி லைற் சினிமா – மஹரக
- எக்ஸ்செல் சினிமா – கொழும்பு 02
- செல்வம் பிறீமியர் சினிமா – செங்கலடி

## 15.3 மூடப்பட்ட திரையரங்குகளை மீளத்திறத்தல்

மூடப்பட்ட 14 பழைய திரையரங்குகளை மீளத் திறப்பதற்கு அளவீடுகள் எடுக்கப்பட்டுள்ளது

கல்யாணி சினிமா - கெட்டிபொல

சமர சினிமா – நாத்தாண்டிய

பிரகாஷ் சினிமா – புண்டலுஓயா

லக்மலி சினிமா - றாகல

ரிஜன்ட் சினிமா - றம்புக்கன

சமனல சினிமா -மெல்சிறிபுர

விஜயா சினிமா- பெடல்கும்புற

ஷாம்றொக் சினிமா – வென்னப்புவ

மைக் சினிமா - மட்டம்பி

தரங்கனி சினிமா - தெரணியகல

வெஸ்லி சினிமா - மானிப்பாய்

சூரியா சினிமா - சூரிய வெவ

றோயல் சினிமா – கஹவத்த

இந்திராணி சினிமா -வெலிமட

## 15.4 திரையரங்குகளை நிர்மாணிப்பதற்கு நிலம் மற்றும் கட்டிடங்கள் பற்றிய தகவல் திரட்டுகை

2013 ஆம் வருடப்பகுதியில் திரையரங்குகளை நிர்மாணிப்பதற்கு நிலம் மற்றும் கட்டிடங்கள் பற்றிய தகவல் திரட்டப்பட்டு அதன் பிரகாரம் 24 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

**15.5 <u>பார்வையாளர்களின் திருப்திக்காக திரையரங்குகளில் உயர்தர உபகரண நிறுவுகை</u>**

நெதர்லாந்து அரசாங்கத்திடமிருந்து ஒரு உதவியாக பெறப்பட்ட ஒளி படக்காட்டிகள் 11 திரையரங்களுக்கிடையே விநியோக்கப்பட்டுள்ளது. மீள் அறவிடா வைப்பொன்றான ரூபாய் 200, 000/- பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு 11 ஒளி படக்காட்டிகளாக பின்வருமாறு விநியோகிக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம், கூட்டுத்தாபனக் கணக்கொன்றில் ரூபாய் 2, 200, 000/- வைப்பிலிடப்பட்டுள்ளது.

சினிமல் சினிமா – அலவ்வ

நியூ நந்த சினிமா - நிகவரெட்டிய

சினில்ம சினிமா - பதுளை

இந்திராணி சினிமா - வெலிமட

விஜயா சினிமா - கிளிநொச்சி

செல்வம் பிறீமியர் சினிமா – செங்கலடி

லக்மலி சினிமா - அரச்சிக்கட்டுவ

டினுசா சினிமா - நாவலப்பிட்டிய

ஸ்கை லைற் சினிமா - மாத்தறை

சுதர்சி சினிமா - ஆனமடுவ

நியூ லைன் சினிமா - தம்புள்ள

**15.6 <u>பார்வையாளர்களுக்கு முப்பரிமாண மற்றும் எண்கணிய சினிமா அனுபவங்களை வழங்குதல்</u>**

இத்தகு தொழில்நுட்பம் பற்றிய விழிப்புணர்வு சினிமா மண்டபம், குத்தகைகள் மற்றும் சுற்றுக்களின் விநியோகம் போன்றனவற்றின் உரிமையாளர்களுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் விளைவாக பல சினிமா மண்டபங்கள் முப்பரிமாண மற்றும் எண்கணிய திரைப்பட வீச்சு என்பனவற்றிற்கு மாற்றப்பட்டுள்ளன.

இந்த வருடத்தில் முப்பரிமாண மற்றும் எண்கணிய திரைப்பட வீச்சு என்பனவற்றிற்கு மாற்றப்பட்டுள்ள சினிமா மண்டபங்கள் பின்வருமாறு :

| சினிமா மண்டபங்கள் | நகரம் | எண்கணிய (2கே) சினிமா | முப்பரிமாண சினிமா |
|---|---|---|---|
| எம்சி – பிளாட்டினம் | பம்பலபிட்டி | | |
| எம்சி – கோல்ட் | பம்பலபிட்டி | | |
| எம்சி – அல்ரா | பம்பலபிட்டி | | |
| எம்சி – சுபிரியர் | பம்பலபிட்டி | | |
| எக்செல் | கொழும்பு- 02 | | |
| செல்வம் பிறீமியர் | செங்கலடி | | |
| சவோய் 1 | வெள்ளவத்தை | | |
| சவோய் 1 | வெள்ளவத்தை | | |

### 15.7 <u>சினிமா ஆசனங்களுக்கான பெறுமதிகளின் திருத்தம்</u>

சினிமா ஆசனங்களின் பெறுமதியை மாற்றியமைப்பதற்கு இந்த வருட காலப்பகுதியில் 68 சினிமா மண்டபங்களிற்கு சிபாரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

### 15.8 <u>வெளிநாட்டு படப்பிடிப்புகளைக் கண்காணித்தல்</u>

இந்த வருட காலப்பகுதியில் வெளிநாட்டு வர்த்தகங்கள், திரைப்படங்கள் மற்றும் ஆவண நிகழ்ச்சிகள் என்பனவற்றிற்கான படப்பிடிப்பு கண்காணிக்கப்பட்டுள்ளது.

## 16 <u>நலப்பணி</u>

இந்த வருட காலப்பகுதியில் நலப்பணிச் செயற்பாடுகள், சிக்கனச் செலவுகள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் கடன் சமூகம் போன்றன சங்கத்தின் உறுப்பினர்களது நலப்பணிக்காக அமுல்படுத்தப்பட்டுள்ளது.

## 17 <u>விளையாட்டுக் கழகம்</u>

இந்த வருட காலப்பகுதியில் பெற்றுக்கொண்ட அடைவுகள் பின்வருமாறு

- 'சனசது சேவா' எனும் கரம் முதன்மை ஆட்டம் 2013.07.31 ஆம் திகதி அன்று நடத்தப்பட்டது – சிறார்களுக்கான முதன்மை ஆட்டத்தில் ஆண்கள் இரட்டையர் பிரிவிலும், பெண்கள் ஒற்றையர் பிரிவிலும் இரண்டாம் பரிசு பெற்றமை.
- 2013.08.23 ஆம் திகதி தொடக்கம் 2013.08.25 ஆம் திகதி வரை தெகியத்தகண்டியவிலுள்ள மகாவலி மைதானத்தில் நடத்தப்பட்ட எல்லை லீக் முதன்மை ஆட்ட போட்டியில் குழு பீ இல் இரண்டாம் பரிசு பெற்றமை.

அத்துடன், ரீ-சேட் மற்றும் திறப்பு வருடாந்த பரிசாக உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது.

## 18 சமய செயற்பாடுகள்

### 18.1 பௌத்த சங்கம்

- தற்போது கல்வியைத் தொடரும் தொழிலாளர்களது பிள்ளைகளுக்கு பயிற்சி புத்தகங்கள் வழங்கியமை.
- பொசன் முழு நிலவு மற்றும் வெசாக் நாட்களிற்காக கூட்டுத்தாபன வளாகத்தில் 'தம்ம தேசன' நடாத்தியமை.
- வெசாக் பண்டிகைக்காக கூட்டுத்தாபன வளாகத்தில் 'பிஸ்கட் மற்றும் கோப்பி தன்செல' நடாத்தியமை.

### 18.2 கத்தோலிக்க சங்கம்

- கூட்டுத்தாபன ஊழியர்களது பிள்ளைகளது பங்குபற்றுதலுடன் கிறிஸ்மஸ் பண்டிகையை நடாத்தியமை.

## 19 மருத்துவ உதவித் திட்டம்

உறுப்பினர்களினது சந்தாக்களினால் மருத்துவ உதவித் திட்டத்திற்கு நிதி வழங்கப்பட்டதுடன் இந்த வருட காலப்பகுதியில் கூட்டுத்தாபனத்திலிருந்து செலவு செய்து ஈடு செய்யப்பட்ட பணம் கையாளப்பட்டுள்ளது. அத்துடன் நிதிக் கட்டுப்பாட்டுச் சபை பின்வருமாறு அமைந்திருந்தது.

1. திரு. ஏ. எல். ரீ. டீ. பெரேரா – தலைவர் (பிரதிப் பொது முகாமையானர் – நிதி)
2. திருமதி. ரஞ்சனி பெரேரா – உறுப்பினர் ( பதில் முகாமை அதிகாரி)
3. திரு. ஆர். பீ. திஸ்ஸ - உறுப்பினர் (செயலாளர், இலங்கை சுதந்திர வர்த்தக ஒன்றியம்)
4. திரு. சுக்கித இலங்ககோன் – உறுப்பினர் ( தலைவர், திரைப்பட கூட்டுத்தாபன தொழிலாளர் சங்கம்)
5. திரு. கே. ஆர். வின்சன்ட் - உறுப்பினர் ( தேசிய வர்த்தக ஒன்றிய பிரதிநிதி)
6. திரு. ஆசோகா குணதிலக - பொறுப்பதிகாரி

## 20 வர்த்தக ஒன்றியம்

இலங்கை சுதந்திர வர்த்தக ஒன்றியம், தேசிய வர்த்தக ஒன்றியம், நிறைவேற்றதிகாரிகள் சங்கம் மற்றும் திரைப்பட கூட்டுத்தாபன தொழிலாளர் சங்கம் போன்றன முகாமைத்துவத்துடனான ஒத்துழைப்பில் செயற்பட்டுள்ளது.

## 21 <u>ஒப்புரை</u>

கூட்டுத்தாபன ஊழியர்கள் பொறுப்புடனும், 2013 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் வெற்றிகரமான செயற்பாட்டினை அடைவதில் அச்சமின்றி அர்பணிப்புடனும் சேவையாற்றியுள்ளதுடன் கூட்டுத்தாபனத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் முகாமைத்துவம் தனது பாராட்டுக்களை வழங்குவதற்கு விரும்புகின்றது.

ஒப்பம்

பணிப்பாளர் சபையின் சார்பாக

சட்டத்தரணி. அசோகா சிரசிங்க

தலைவர்

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## 2013.12.31ஆந் திகதிக்கு முடிவுற்ற வருடத்திற்கானது
## விரிவான வருமானக் கூற்று

| விபரம் | குறிப்பு | 2013 | 2012 | காட்சிகள் | திரை யரங்குகள் | தயாரிப்பு | பொது நிருவாக செலவு |
|---|---|---|---|---|---|---|---|
| விற்பனை | 03 | 41,575,700 | 46,432,012 | 35,579,114 | 2,269,993 | - | 3,726,593 |
| குறைக்கப்பட்டது. : விற்பனை செலவு | 04 | 5,572,100 | 3,261,147 | - | 895,012 | - | 4,677,088 |
| அன்னளவு இலபாம் | | 36,003,600 | 43,170,865 | 35,579,114 | 1,374,981 | - | (950,495) |
| குறைக்கப்பட்டது. : செலவு | | | | | | | |
| சேவையாளர் சேவை முயற்சிகள் | 05 | 59,714,904 | 64,031,817 | 12,102,386 | 9,111,517 | 2,963,881 | 35,537,120 |
| பிரயான மற்றும் வழங்கல் கொடுப்பனவு | 06 | 563,652 | 710,466 | 3,384 | 18,241 | - | 542,027 |
| வழங்கல் மற்றும் உபகரணங்கள் | 07 | 7,800,622 | 6,991,428 | 2,005 | 1,841,037 | 13,600 | 5,943,980 |
| புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு மற்றும் கழித்தல் | 08 | 26,935,121 | 25,040,572 | 112,503 | 6,029,143 | 33,000 | 20,760,475 |
| போக்குவரத்து, தொடர்புகள், தேவைப்பாடுகள் மற்றும் ஏனைய சேவைகள் | 09 | 17,283,927 | 15,226,827 | 934,881 | 1,714,972 | 1,668,009 | 12,966,065 |
| வாராக் கடனிற்காக வேண்டி சேதமாக்கப்பட்ட பொருத்தப்பாடுகள் | | 24,779,026 | 20,310,000 | 22,782,150 | - | 1,879,187 | 117,689 |
| பணிக்கொடைகளை வேறாக்குதல் | | 2,725,863 | 2,326,443 | 576,075 | 460,823 | 158,383 | 1,530,582 |
| திரைப்படக் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் நிதியத்திற்காக வேண்டி வேறாக்குதல் | | 200,000 | 200,000 | - | - | 200,000 | - |
| பங்கு சேதங்கள் | | 862 | 85,120 | - | 862 | - | - |
| | | 140,003,977 | 134,922,673 | 36,513,384 | 19,176,595 | 6,916,060 | 77,397,938 |
| பொது நிருவாக செலவுகள் உள்வாங்குதல் | | - | - | 26,315,297 | 20,123,463 | 6,191,834 | (52,630,594) |
| | | 140,003,977 | 134,922,673 | 62,828,681 | 39,300,058 | 13,107,894 | 24,767,344 |
| செயற்பாட்டு இலாபம் - நட்டம் | | (104,000,378) | (91,751,808) | (27,249,567) | (37,925,077) | (13,107,894) | (25,717,839) |
| இணைத்துக் கொண்டவை : வேறு வருமானம் | 10 | 45,662,551 | 41,264,022 | | | | |
| வருடத்தின் நட்டம் - இலாபம் | | (58,337,827) | (50,487,786) | | | | |
| இணைத்துக் கொண்டவை : திரைசேறி பெறுகைகள் | | 69,960,000 | 68,308,000 | | | | |
| வரிக்கு முன்னரான இலாபம் | | 11,622,173 | 17,820,214 | | | | |
| குறைக்கப்பட்டது : வரிக்காக வேறாக்கப்பட்டவை | | - | - | | | | |
| வரிக்குப் பின்னரான இலாபம் | | 11,622,173 | 17,820,214 | | | | |

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## 2013 டிசம்பர் 31 ஆந் திகதி
## நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | 2013 | 2012 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| **அங்கத்துவம் வகிப்பது** | | | |
| **நிலையான சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 11 | 376,958,916 | 340,619,051 |
| நீண்ட கால முதலீடு | 12 | 127,000 | 127,000 |
| | | 377,085,916 | 340,746,051 |
| **அசையும் சொத்துக்கள்** | | | |
| குறகிய கால முதலீடுகள் | 13 | 124,798,484 | 105,506,897 |
| பங்குகள் | 14 | 13,180,122 | 16,980,509 |
| கடனாளிகள் | 15 | 140,639,948 | 172,539,656 |
| பல்வேறுபட்ட கடனாளிகள் | 16 | 26,958,338 | 24,621,778 |
| வைப்பு மற்றும் பிற்கால கொடுப்பனவு | 17 | 10,668,621 | 10,524,054 |
| நிதி மற்றும் வங்கி மீதிகள் | 18 | 30,075,160 | 25,587,063 |
| | | 346,320,674 | 355,759,958 |
| முழு சொத்துக்கள் | | 723,406,590 | 696,506,008 |
| **இடப்பட் முதலீடுகள்** | | | |
| அனுமதிக்கப்பட்ட மூலதனங்கள் | | 10,000,000 | 10,000,000 |
| ஒட்டுமொத்த இலாபம் | | 273,324,184 | 249,577,323 |
| வேறு ஒதுக்கீடுகள் | | 123,482,759 | 123,482,759 |
| வழங்கல்கள் | 19 | 138,062,990 | 144,961,548 |
| | | 544,869,933 | 528,021,630 |
| **அசையாத சொத்துக்கள்** | | | |
| பணிக்கொடை வேறாக்கள் | 20 | 32,225,489 | 33,885,923 |
| | | 32,225,489 | 33,885,923 |
| **குறைக்கப்பட்டது.: அசையும் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக்கள் | 21 | 2,446,727 | 2,386,727 |
| திரைப்பட வாடகை கடன் உரிமையாளர் | 22 | 105,930,840 | 85,139,962 |
| வேறு கடன் உரிமையாளர்கள் | 23 | 37,933,601 | 47,071,767 |
| | | 146,311,168 | 134,598,456 |
| மொத்த பொறுப்புக்கள் | | 723,406,590 | 696,506,009 |

……………………………………… ……………… ………………

பொது முகாமையாளர் பதில் கடமை பார்க்கும் - நிதி    தலைவர்    பணிப்பாளர்

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
303, பௌத்தாலோக்க மாவத்தை
கொழும்பு 07
2014.07.18

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்**
**2013.12.31ஆந் திகதிக்கு முடிவுற்ற வருடத்திற்கானது**
**உரிமை மாற்றம் தொடர்பான கூற்று**

| | | உரிமையான மூலதனம் ரூ. | ஒட்டுமொத்த இலாபம் ரூ. | மூலதன ஒதுக்கீடு ரூ. | றுமதிப்பீடு செய்யப்பட் ஒதுக்கீடு ரூ. | வேறு ஒதுக்கீடுகள் ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| **2012.01.01ஆந் திகதிக்கு மீதி** | | 10,000,000 | 226,348,818 | 499,898 | 115,153,399 | 7,829,462 | 359,831,577 |
| முன்னய வருடங்களுக்காக வேண்டி மேற்கொண்ட பொருத்தங்கள் | | - | 5,408,290 | - | - | - | 5,408,290 |
| வருடத்தின் இலாபம் | | - | 17,820,214 | - | - | - | 17,820,214 |
| **2012.12.31ஆந் திகதி மீதி** | | 10,000,000 | 249,577,323 | 499,898 | 115,153,399 | 7,829,462 | 383,060,082 |
| வருடத்தின் இலாபம் | | - | 11,622,173 | - | - | - | 11,622,173 |
| முன்னய வருடங்களுக்காக வேண்டி மேற்கொண்ட பொருத்தங்கள் | **குறிப்பு ஏ** | - | 12,124,686 | - | - | - | 12,124,686 |
| **2012.12.31ஆந் திகதி மீதி** | | 10,000,000 | 273,324,182 | 499,898 | 115,153,399 | 7,829,462 | 406,806,941 |

**குறிப்பு ஏ**

முன்னய வருடத்திற்காக வேண்டி மேற்கொண்ட பொருத்தங்களில் உள்ளடங்குவது

| | |
|---|---|
| செலுத்துவதற்குத் தேவையற்ற வழங்கலாளர்களுக்காக வேண்டி செய்த காசோலை வழங்குதலை வருமானத்திற்குள் அறிந்து கொள்ளல் | ரூ. 238,357.01 |
| சேவையாளர் நம்பிக்கை நிதி மற்றும் உரிய செலவிற்காக வேண்டி செய்த ஒதுக்கீடுகள் முன்னய வருடங்களின் இலாபத்திற்கு பொருந்துதல் | ரூ. 10,931,855.34 |
| ஆரம்ப தொகைகளுக்காக வேண்டி மேற்கொண்ட பொருத்தங்கள் | ரூ. 954,473.75 |

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்**
**2013 டிசம்பர் 31 ஆந் திகதி**
**நிதி நிலைமைக் கூற்று**

| | 2013 | 2012 |
|---|---|---|
| **பணிச் செயற்பாடுகளினால் பெற்றுக் கொள்ளப்பட் நிதி** | ரூ. | ரூ. |
| வரி குறைப்பதற்கு முன்னரான தூய இலாபம் (குறைக்கப்பட்டது) | (58,337,827) | (50,487,786) |
| தயாரிப்புக் கடன் படி வட்டி | (4,007,480) | (1,653,326) |
| நிலையான மற்றும் திரைசேறி பற்றுச்சீட்டு வட்டி | (11,787,366) | (9,923,925) |
| | (74,132,673) | (62,065,037) |
| **நிதி பிரழ்வு தொடர்பாக அதிகாரப்படுத்தாத விடயங்களுக்கான பொருத்தங்கள்** | | |
| குறைப்புகள் | 17,780,018 | 17,648,516 |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடு | 2,725,863 | 2,326,443 |
| சமநிலையற்ற கடன்களுக்கான ஒதுக்கீடுகள் | 24,779,026 | 20,310,000 |
| டீ.ரி.எஸ். ஒலி உபகரணங்கள் | - | (16,099,088) |
| பராமரிப்புச் செலவு ஒதுக்கீடுகள் | - | 616,923 |
| வருடத்தின் ஆரம்பத்தில் தொகை பொருத்தங்கள் | - | (4,567,555) |
| உரிமை காணாத வேதனஙகளுக்கான ஒதுக்கீடுகள் | - | (387,231) |
| செலுத்தப்படாத விற்பனை வரி - உரிமை கோரப்படாத வேதனங்களுக்காக அ | (306,426) | (178,119) |
| பாவனையில் இல்லாத சொத்துக்களை புத்தகத்திலிருந்து நீக்குதல் | 202,448 | 178,500 |
| அரச வழஙகல்களை வருமானத்தில் அடையாளம் காணல் | (13,898,558) | (13,805,436) |
| கடன் உரிமையான சேதங்களை பொருத்துதல் | (4,193) | (60,764) |
| இணக்கப்பாட்டுக்கு வராத விடயங்களுக்காக வேண்டி பொருத்தப்பாடுகள் | - | (54,974) |
| | (42,854,494) | (56,137,822) |
| **கடந்த கால வரையரைக்கான விடயங்கள்** | | |
| கடந்த கால வரையரைக்கான விடயங்களுக்காக வேண்டி பொருத்தங்கள் | 12,124,686 | 5,408,290 |
| நிலையான சொத்துக்களுக்கான பொருத்தங்கள் | 830,021 | 885,872 |
| வருடத்தின் ஆரம்பத்தில் தொகை பொருத்தங்கள் | - | (4,567,555) |
| செயற்பாட்டு மூலதன விடயங்களின் வேறுபாடுகளுக்கு முனன்ரான பணி இலாபம் | (29,899,787) | (54,411,215) |
| **செயற்பாட்டு மூலதன விடயங்களின் மாற்றங்கள்** | | |
| தொகை (குறைவு) | 3,800,387 | (10,735,600) |
| கடனாளிகள் (குறைவு) | 4,784,122 | (19,137,630) |
| வைப்புகள் மற்றும் எதிர்கால கொடுப்பனவுகள் (அதிகரிப்பு) | (347,016) | 18,995,027 |
| கடன் உரிமையாளர்கள் (அதிகரிப்பு) | 60,000 | - |
| வேறு கடன் உரிமையாளர்கள் (குறைவு) | 20,795,071 | 27,805,648 |
| | (8,831,739) | (7,991,689) |
| | (9,638,962) | (45,475,459) |
| **குறைக்கப்பட்டது :** | | |
| பணிக்கொடை கொடுப்பனவு | (4,386,297) | (6,457,715) |
| உடன்பாட்டுக்கு வராத கொடுப்பனவுகள் | - | (845,416) |
| | (14,025,259) | (52,778,590) |
| **முதலீட்டு செயற்பாடுகளினால் பெறப்பட்ட பிரவாகங்கள்** | | |
| தயாரிப்பு கடன் வட்டி | | |
| நிலையான மற்றும் திரைசேறி பற்றுச்சீட்டு வட்டி | 15,794,846 | 11,577,251 |
| நிலையான சொத்துக்களை கைப்பற்றிக் கொள்ளல் | (19,291,587) | (16,385,814) |
| திரைசேறி பற்றுச் சீட்டுகள் மற்றும் நிலையான முதலீடுகள் | (54,949,905) | (7,769,115) |
| நிலையான சொத்துக்கள் விற்பனை மூலம் பெறப்பட் நிதி | - | 80,000 |
| திரைசேறி பெறுகைகள் | 76,960,000 | 75,308,000 |
| நிதி மற்றும் நிதிக்கு சமனான விடயங்களினால தூய அதிகரிப்பு | 4,488,095 | 10,031,732 |
| வருட ஆரம்த்தில் நிதி மற்றும் நிதிக்குச் சமனான விடயங்களின் மீதி | 25,587,063 | 15,555,331 |
| வருடா இறுதியில் நிதி மற்றும் நிதிக்குச் சமனான விடயங்களுக்கான மீதி | 30,075,158 | 25,587,063 |

## நிதி அறிக்கை தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள் தொடர்பான கூற்று

### கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம்

1. கூட்டுத்தாபனத்தின் வருமானம் மற்றும் செலவு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் ஏனைய அனைத்து நிதி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக முறையான கணக்குப் புத்தகம் வைத்திருத்தல் தொடர்பாக,

2. கூட்டுத்தாபனத்தின் நிதி செயற்பாடு மற்றும் நிதி நிலைமை தொடர்பான உண்மையான மற்றும் சாதாரன முன்வைப்பிற்காக வேண்டி 1995 இலக்கம் 15 கொண்ட இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு தரச் சட்டத்தின் கீழ் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் அமுலாக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு தரங்களுக்கு இணங்க கணக்கு அமைத்தல் தொடர்பாகவும் மற்றும்

3. கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களை பாதுகாப்பதற்கும் மற்றும் ஊழல் மற்றும் முரண்பாடுகளை தவிர்ப்பதற்காக வேண்டி முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டியது.

## 1. பொதுவான தகவல்கள்

### 1.1.1 இட அமைவு மற்றும் சட்டவியல் நிலைமை

இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம் 1971 இலக்கம். 47 கொண்ட சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டுத்தாபனமாக்கப்பட்டு அமைக்கப்பட்டது. அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் கொழும்பு 07, பௌத்தாலோக்க மாவத்தை, இலக்கம் 303 என்ற இடத்தில் அமைந்துள்ளது.

### 1.1.2 அடிப்படைச் செயற்பாடுகள் மற்றும் செயற்பாட்டின் இயல்புகள்

இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனம் அடிப்படையில் இலங்கையில் திரைப்படத் தொழிலை சர்வதேச தரத்திற்கு சமமாகும் வன்னம் விருத்தி செய்வவதற்காக தொடர்ந்தும் செயற்படுதல்

### 1.1.3 வெளியிடுவதற்காக வேண்டி அங்கீகரிக்கப்பட்ட திகதி

இந்த நிதிக் கூற்றினை விநியோகிப்பதற்காக வேண்டி பணிப்பாளர் சபையினால் 2014.08.04ஆந் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டது

### 1.2 கணக்குகளை அமைக்கும் அடிப்படைகள்

### 1.2.1 இணக்கப்பாடு தொடர்பான கூற்று

கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைப்பாட்டுக் கூற்று, தெளிவான வருமானம், உரிமை மாற்றல் தொடர்பான கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கை சாராம்சம் கொண்டதான குறிப்பு (நிதிக் கூற்று) அமைக்கப்பட்டது, சர்வதேச கணக்கீட்டுத் தரக் குழுவினால் வழங்கப்பட்ட சர்வதேச நிதி அறிக்கைத் தரம் (IFRS) பிரிதிநிதித்துவப்படும் வன்னம் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டுத் தரம் (SLFRS) இற்கு இணங்கும் வன்னம்

### 1.2.2 நிதிக் கூற்று தொடர்பான பொறுப்பு

நிதிக் கூற்று அமைத்தல் மற்றும் முன்வைதப்பதற்கான பொறுப்பு இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

### 1.2.3 கணக்கீட்டு அடிப்படை

உரிய குறிப்பின் கீழ் சாதாரன பெறுமதி தொடர்பாக உரிய வெளிப்பாட்டினை மேற்கொண்டிருந்ததால் மட்டுமே நிதிக் கூற்றானது வரலாற்று செலவினை அடிப்படையாய்க் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

### 1.2.4 தொடர்ச்சியா நிலை

| நிலுவை சேவை சேமலாப நிதக்கான ஒதுக்கீட்டுக் கணக்கு | - | 10,000,000 |
| திரைப்பட விழாவிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு | 5,000,000 | 5,000,000 |
| 2012 பிறக்கும் போது வரிக் கொடுப்பனவு | 11,677 | 9,136 |
| சம்பளம் மற்றும் வேதனங்கள் ஒதுக்கீட்டுக் கணக்கு | 714,182 | 714,182 |
| கன்டிராஸ் திரையரங்கு வரி வாடசை கொடுப்பனவு | - | 84,234 |
| கிடைக்கப் பெற வேண்டி தயாரிப்பக் கடன் வட்டி ஒதுக்கீடு | 3,132,217 | - |
| | **37,933,601** | **47,071,767** |

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்**
**2013 டிசம்பர் 31ஆந் திகதிக்கு**
**நிதி நிலைப்பாடு தொடர்பான குறிப்பு**

| | மொத்தம் 2013 | காட்சிகள் | கலையரங்கம் | தயாரிப்பு | பொது நிருவாகச் செலவு |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| பணிப்பாளர் கட்டணம் | 336,000 | - | - | - | 336,000 |
| பிரசாரம் | 1,066,959 | 390,960 | - | 623,240 | 52,759 |
| விசேட கொமிசன் கட்டணம் | 604,080 | - | - | - | 604,080 |
| சட்டவியல் கட்டணம் | 2,054,513 | - | - | - | 2,054,513 |
| கூட்டுத்தாபன விழாக்கள் | 833,592 | - | - | - | 833,592 |
| கணக்காய்வுக் கட்டணம் | 500,000 | - | - | - | 500,000 |
| பாதுகாப்புச் சேவை | 1,982,335 | - | 850,974 | - | 1,131,362 |
| வங்கிக் கட்டணம் | 33,473 | - | - | - | 33,473 |
| பல்வேறு செலவுகள் | 130,509 | - | - | - | 130,509 |
| சினிமா கல்வி | 325,518 | - | - | 325,518 | - |
| வெளி இறங்கல்கள் மற்றும் கலைஞர்களின் செலவு | 568,855 | - | - | 568,855 | - |
| புதிய திரையரங்கு செலவு | 467,882 | - | - | - | 467,882 |
| தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சி | 935,972 | - | - | - | 935,972 |
| செலாவனி விகிதாசார பொருத்தங்கள் | 84,224 | - | - | - | 84,224 |
| மெதுவாய் நிலைமாறும் இயந்திரங்களுக்காக மேற்கொண்ட செலவுகள் | 174,649 | 174,649 | - | - | - |
| | 10,098,561 | 565,609 | 850,974 | 1,517,613 | 7,164,366 |

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்**
**2013 டிசம்பர் 31ஆந் திகதிக்கு**
**நிதி நிலைப்பாடு தொடர்பான குறிப்பு**

| | மொத்தம் 2013 | காட்சிகள் | கலையரங்கம் | தயாரிப்பு | பொது நிருவாகச் செலவு |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| போக்குரவத்து | 270,554 | 110,404 | - | - | 160,150 |
| தொடர்புகள் | 1,596,048 | 221,898 | 171,649 | 115,288 | 1,087,213 |
| <u>தேவைப்பாடுகள்</u> | | | | | |
| உள்ளக பிரயோகம் | 329,995 | 18,694 | 311,301 | - | - |
| வெளிநாட்டு திரைப்பட விழாக்கள் | 26,275 | - | - | 26,275 | - |
| நலன்புரிச் செலவுகள் | 3,230,615 | 18,275 | 218,580 | 8,833 | 2,984,927 |
| சேவையார் இணைத்துக் கொள்ளல் ம்றறும் பயிற்சி | 398,428 | - | - | - | 398,428 |
| நீர் பற்றுச் சீட்டு | 326,763 | - | - | - | 326,763 |
| | 4,312,076 | 36,969 | 529,881 | 35,108 | 3,710,118 |
| வரிபண வரி | 804,239 | - | 162,469 | - | 641,770 |

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## 2013 டிசம்பர் 31ஆந் திகதிக்கு
## நிதி நிலைப்பாடு தொடர்பனா குறிப்பு

**(24.2) ஆரம்ப நிதி நிலைப்பாடு 2012.12.1ஆந் திகதிக்கு நிலுவை சமப்படுத்தல்**

| | குறிப்பு | 2012.01.01 திகதிக்கு **SLAS** | வகைப்படுத்தல் மாற்றங்கள் | அளவிடல் மாற்றங்கள் | 2012.01.01 திகதிக்கு **SLFRS** |
|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| அங்கத்துவம் வகிப்பது | | | | | |
| நிலையான சொத்துக்கள் | | | | | |
| சொத்துகள், இயந்திரங்கள் ம்றம் உபகரணங்கள் | | 343,489,275 | - | - | 343,489,275 |
| நீண்ட கால முதலீடுகள் | | 127,000 | - | - | 127,000 |
| | | 343,616,275 | - | - | 343,616,275 |
| அசையும் சொத்துக்கள் | | | | | |
| குறுகிய கால முதலீடுகள் | | 97,737,782 | - | - | 97,737,782 |
| தொகை | 01 | 19,438,153 | - | (13,193,244) | 6,244,909 |
| கடனாளிகள் | 02 | 189,727,926 | (25,345,773) | (10,822,312) | 153,559,841 |
| பல்வேறு கடனாளிகள் | 03 | - | 25,345,773 | (164,019) | 25,181,754 |
| வைப்புக்கள் மற்றும் முற்கொடுப்பனவு | 04 | 30,516,261 | - | (997,120) | 29,519,141 |
| நிதி மற்றும் வங்கி மீதி | | 15,555,332 | - | - | 15,555,332 |
| | | 352,975,454 | - | (25,176,695) | 327,798,759 |
| மொத்தச் சொத்துக்கள் | | 696,591,729 | - | (25,176,695) | 671,415,034 |
| இணைத்துக் கொண்டு மூலதனம் | | | | | |
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | | 10,000,000 | - | - | 10,000,000 |
| ஒட்டுமொத்த இலாபம் | 05 | (55,272,779) | - | 281,621,597 | 226,348,818 |
| வேறு ஒதுக்கீடு | | 123,482,759 | - | - | 123,482,759 |
| மானியங்கள் | 06 | 438,997,297 | - | (287,230,313) | 151,766,984 |
| அரச உதவி பணம் | | 517,207,277 | - | (5,608,716) | 511,598,561 |
| அசையாத பொறுபபுக்கள் | | | | | |
| பணிக்கொடை ஒதுக்கங்கள் | | 38,017,196 | - | - | 38,017,196 |
| | | 38,017,196 | - | - | 38,017,196 |
| குறைக்கப்பட்டது : நடமாடும் பொறுப்புக்கள் | | | | | |
| வைப்புக்கள் | | 2,386,727 | - | - | 2,386,727 |
| திரைப்பட வாடகை கடன் உரிமையாளர்கள் | 07 | 75,376,915 | - | (17,981,837) | 57,395,078 |
| வேறு கடன் உரிமையாளர்கள் | 08 | 63,603,614 | - | (1,586,142) | 62,017,472 |
| | | 141,367,256 | - | (19,567,979) | 121,799,277 |
| மொத்தம் | | 696,591,729 | - | (25,176,695) | 671,415,034 |

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

## 2013 டிசம்பர் 31ஆந் திகதிக்கு

## நிதி நிலைப்பாடு தொடர்பனா குறிப்பு

**(24.2) ஆரம்ப நிதி நிலைப்பாடு 2012.12.1ஆந் திகதிக்கு நிலுவை சமப்படுத்தல்**

| | குறிப்பு | 2012.12.31 திகதிக்கு **SLAS** | வகைப்படுத்தல் மாற்றங்கள் | அளவிடல் மாற்றங்கள் | **2012.12.31 திகதிக்கு SLFRS** |
|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| அங்கத்துவம் வகிப்பது | | | | | |
| நிலையான சொத்துக்கள் | | | | | |
| சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | **09** | 340,797,551 | - | (178,500) | 340,619,051 |
| நீண்ட கால முதலீடுகள் | | 127,000 | - | - | 127,000 |
| | | 340,924,551 | - | (178,500) | 340,746,051 |
| அசையும் சொத்துக்கள் | | | | | |
| குறுகிய கால முதலீடுகள் | | 105,506,897 | - | - | 105,506,897 |
| தொகை | **01** | 30,173,753 | - | (13,193,244) | 16,980,509 |
| கடனாளிகள் | **02** | 208,865,556 | (25,728,387) | (10,822,312) | 172,314,857 |
| பல்வேறு கடனாளிகள் | **03** | - | 25,010,597 | (164,019) | 24,846,578 |
| வைப்புக்கள் மற்றும் முற்கொடுப்பனவு | **04** | 11,521,174 | - | (997,120) | 10,524,054 |
| நிதி மற்றும் வங்கி மீதி | | 25,587,063 | - | - | 25,587,063 |
| | | 381,654,443 | (717,790) | (25,176,695) | 355,759,958 |
| மொத்தச் சொத்துக்கள் | | 722,578,994 | (717,790) | (25,355,195) | 696,506,009 |
| இணைத்துக் கொண்டு மூலதனம் | | | | | |
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | | 10,000,000 | - | - | 10,000,000 |
| ஒட்டுமொத்த இலாபம் | **05** | (46,352,299) | - | 295,929,622 | 249,577,323 |
| வேறு ஒதுக்கீடு | | 123,482,759 | - | - | 123,482,759 |
| மானியங்கள் | **06** | 445,997,297 | - | (301,035,749) | 144,961,548 |
| | | 533,127,757 | - | (5,106,127) | 528,021,630 |
| அசையாத பொறுப்புக்கள் | | | | | |
| பணிக்கொடை ஒதுக்கங்கள் | | 33,885,923 | - | - | 33,885,923 |
| | | 33,885,923 | - | - | 33,885,923 |
| குறைக்கப்பட்டது : நடைமுறை பொறுப்புக்கள் | | | | | |
| வைப்புக்கள் | | 2,386,727 | - | - | 2,386,727 |
| தவணைப்பட வாடகை கடன் உரிமையாளர்கள் | **07** | 103,182,563 | - | (18,042,601) | 85,139,962 |
| வேறு கடன் உரிமையாளர்கள் | **08** | 49,996,024 | (717,790) | (2,206,467) | 47,071,767 |
| | | 155,565,314 | (717,790) | (20,249,068) | 134,598,456 |
| மொத்தம் | | 722,578,994 | (717,790) | (25,355,195) | 696,506,009 |

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்**

**2013 டிசம்பர் 31ஆந் திகதி முடிவுற்ற வருடத்திற்கானது**

**விரிவான வருமானக் கூற்று**

**(24.3) 2012.12.31ஆந் திகதிக்கு முடிவுற்ற வருடத்திற்கான வருமானக் கூற்று**

| | குறிப்பு | SLAS 2012 ரூ. | அளவிட முடிந்த மாற்றங்கள் ரூ. | SLFRS 2012 ரூ. |
|---|---|---|---|---|
| விற்பனைகள் | | 46,432,012 | - | 46,432,012 |
| குறைக்கப்பட்டது : விற்பனை செலவு | | 3,261,147 | - | 3,261,147 |
| மொத்த இலாபம் | | 43,170,865 | - | 43,170,865 |
| குறைக்கப்பட்டது : செலவு | | | | |
| சேவையாளர் ஊதியம் | | 64,031,817 | - | 64,031,817 |
| பயணங்கள் மற்றும் சார்ந்திருத்தல் கொடுப்பனவு | | 710,466 | - | 710,466 |
| வழங்கல் மற்றும் உபகரணங்கள் | | 6,991,428 | - | 6,991,428 |
| புதுப்பித்தல் பராமரிப்பு மற்றும் குறைப்பு | | | | |
| (ஏ) புதுப்பித்தல் மற்றும் பராமரிப்புக் குறைப்பு | | 25,040,572 | - | 25,040,572 |
| போக்குவரத்து, தொடர்புகள், தேவைப்பாடுகள் மற்றும் சேவைகள் | 09 | 15,048,327 | 178,500 | 15,226,827 |
| வாராக் கடன்கள் மற்றும் ஒதுக்கீடுகள் | | 20,310,000 | - | 20,310,000 |
| பணிக்கொடை ஒதுக்கீடு | | 2,326,443 | - | 2,326,443 |
| திரைப்படக் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் | | 200,000 | - | 200,000 |
| நிதியத்திற்கான ஒதுக்கீடுகள் | | | | - |
| தொகை சேதம் | | 85,120 | - | 85,120 |
| | | 134,744,173 | 178,500 | 134,922,673 |
| பொது நிருவாக செலவு உள்வாங்குதல் | | - | | - |
| | | 134,744,173 | 178,500 | 134,922,673 |
| செயற்பாட்டு இலாபம் - நட்டம் | | (91,573,308) | (178,500) | (91,751,808) |
| சேர்த்துக் கொண்டோம் : வேறு வருமானங்கள் | குறிப்பு (10) | 26,777,498 | 14,486,525 | 41,264,023 |
| வருடா இலாபம் - நட்டம் | | (64,795,810) | 14,308,025 | (50,487,785) |
| குறைக்கப்பட்டது : திரைசேறியினால் கிடைக்கப பெற்ற நிதி | | 68,308,000 | - | 68,308,000 |
| | | 3,512,190 | 14,308,025 | 17,820,215 |
| குறைக்கப்பட்டது : வரிக்கான ஒதுககீடுகள் | | - | - | - |
| | | **3,512,190** | **14,308,025** | **17,820,215** |

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்**
**2013 டிசம்பர் 31ஆந் திகதி**
**குறிப்பு**

**குறிப்பு இலக்கம் 01**

| | ரூபா. |
|---|---|
| மெதுவாக பாவனை செய்யும் மற்றும் பாவனை செய்யாத தொகைகளுக்கான ஒதுக்கீடு | |
| 2012.01.01 ஆந் திகதிக்கு | 13,193,244 |

**குறிப்பு இலக்கம் 02**

2.1. வகைப்படுத்தல் மாற்றம்

| | |
|---|---|
| பல்வேறு கடனாளிகள் வர்த்தகக் கடனாளிகளிடமிருந்து வேறுபடுத்தி அடையாளம் காணல் | |
| 2012.01.01ஆந் திகதிக்கு | 25,345,773 |
| 2012.12.31ஆந் திகதிக்கு | 25,728,387 |

2.1. கணக்கீட்டுக் கொ்ளளக் கூடிய மாறற்ங்கள்

| | |
|---|---|
| 2012.01.01 ஆந் திகதிக்கு கிடைக்காத கடனுக்கான சேத பொருத்தங்கள் | 10,817,252 |
| | 10,817,252 |
| 2012.01.01ஆந் திகதிக்கு நீக்கவிடுவதற்கு அனுமதி பெற்ற கடனாளிகளை புத்தகத்திலிருந்து நீக்குதல் | |
| தயாரிப்புக் கடனாளிகள் | 10,724 |
| ஆங்கிளத் திரைப்படத்திற்காக கிடைக்ப் பெற வேண்டியவை | (5,664) |
| | 10,822,312 |

**குறிப்பு இல்ககம் 03**

2012.01.01ஆந் திகதிக்கு

அரவிட்டுக் கொள்ள முடியாத வேறு கடனாளிகளை புத்தகத்திலிருந்து நீக்குதல்

| | |
|---|---|
| தேசிய பயிலுனர் சபை | 6,038 |
| திரட்டும் போதான வரி | 1,654 |
| கன்ட்ராஸ் சேவையாளர் கடன் நிருவாக கணக்கு | 148,927 |
| கன்ட்ராஸ் சேவையாளர் கடன் கணக்கு | 7,400 |
| | 164,019 |

2012.12.31ஆந் திகதிக்கு

வகைப்படுத்தல் மாற்றங்கள்

| | |
|---|---|
| ஊழியர் சேமலாப நிதி | 631,655 |
| ஊழியர் நம்பிக்கை நிதி | 86,135 |
| | 717,790 |

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## 2013 டிசம்பர் 31ஆந் திகதி
## குறிப்பு

**குறிப்பு இலக்கம் 04**

2012.01.01ஆந் திகதிக்கு

அரவிட்டுக் கொ்ளள முடியாத வைப்புக்ள் மற்றும் முற் கொடுப்பனவுகளை நீக்குதல்

| | |
|---|---|
| ம்ற் கொடுப்பனவ | 13,250 |
| இறங்கல் போக்குவரத்து செலவு | 2,000 |
| அரவிட்டுக் கொள்ள முடியாத வைப்புகள் மற்றும் முற் கொடுப்பனவுக்கான சேத பொருத்தங்கள் | |
| கொடுப்பனவுகளை வேறாக்குதல் | 328,142 |
| மீள் கிடைக்கக் கூடிய வைப்புகள் | 653,728 |
| | 997,120 |

**குறிப்பு இலக்கம். 05**

**ஓட்டு மொத்த வருமானம் சமப்படுத்தும் கூற்று**

| | |
|---|---|
| மெதுவாய் பிரயோகிக்கும் மற்றும் பிரயோகிக்காத தொகைக்கான ஒதுக்கீடுகள் | (13,193,244) |
| கிடைக்கப் பெறாத கடனுக்கான சேதப் பொருத்தங்க்ள | (10,817,252) |
| அரவிட்டுக் கொள்ள முடியாத வேறு கடனாளிகள் புத்தகத்திலிருந்து நீக்குதல் | (164,019) |
| அரவிட்டுக் கொள்ள முடியாத வைப்புகள் மற்றும் முற் கொடுப்பனவு நீக்குதல் - சேதங்களுக்கான பொருத்தங்கள் | (997,120) |
| கடனாளிகளுக்கான சேதங்களுக்கான பொருத்தங்கள் | 17,981,837 |
| வேறு கடனாளிகளுக்கான நீக்குதல்கள் - சேதப் பொருத்தங்கள் | 1,586,142 |
| திரைசேறி வழங்கல்கள் உரியவாறு வருமானத்திற்குள் அடையாளப் படுத்துதல் | 287,230,313 |
| அனுமதி பெற்ற கடனாளிகளை புத்தகத்திலிருந்து நீக்குதல் | |
| தயாரிப்புக் கடனாளிகள் | (10,724) |
| ஆங்கிள திரைப்படங்ளுக்கான கிடைக்கப் பெற வேண்டியவைகள் | 5,664 |
| 2012.01.01ஆந் திகதிக்கு அனைத்து மாற்றங்களினதும் மொததம் | 281,621,597 |
| வேறு கடனாளிகளுக்கான நீக்கல்கள் | 387,233 |
| அனுமதி பெற்ற விகிதாசார வரி நீக்கிவிடுதல் | 178,117 |
| திரைசேறி வழங்கல்களை உரயிவாறு வருமானத்தில் அடையாளங் கண்டு கொள்ளல் | 13,805,436 |
| உடைத்து நீக்கப்பட்டு தற்போது பிரயோகிக்க முடியாத கட்டிடங்களின் தூய பெறுமதி புத்தகத்திலிருந்து நீக்கி விடுதல் | (178,500) |
| கடன் உரிமையாளர்களுக்காக வேண்டி சேத பொருத்தங்கள் | 60,765 |
| உடன்பாட்டிற்கு வராத விடயங்களுக்கான பொருந்ததங்கள் | 54,974 |
| 2012.12.31ஆந் திகதி அனைத்து மாற்றங்களின் மொத்தம் | 295,929,622 |

**குறிப்பு இலக்கம் 06**

**திரைசேறி வழங்கல்கள் உரியவாறு வருமானத்தில் அடையாளங் கண்டு கொள்ளல்**

| | |
|---|---|
| 2012.01.01ஆந் திகதிக்கு | 287,230,313 |
| 2012.12.31ஆந் திகதிக்கு | 13,805,436 |
| | 301,035,749 |

**குறிப்ப இலக்கம் 07**

**கடன் உரிமையாளர்களுக்காக வேண்டி சேத்ப் பொருத்தங்கள்**

| | |
|---|---|
| 2012.01.01ஆந் திகதிக்கு | 17,981,837 |
| 2012.12.31ஆந் திகதிக்கு | 60,765 |
| | 18,042,602 |

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

## 2013 டிசம்பர் 31ஆந் திகதி

## நிதி நிலைப்பாட்டிற்கான குறிப்பு

**குறிப்பு இல. 08**

**வேறு கடன் உரிமையாளர்களுக்கான சேத பொருத்தங்கள்**

| | |
|---|---|
| 2012.01.01ஆந் திகதிக்கு | 644,839 |
| **வேறு கடன் உரிமையாளர்களுக்கான நீக்கல்கள்** | |
| 2012.01.01ஆந் திகதிக்கு | 941,303 |
| | 1,586,142 |

**வேறு கடன் உரிமையாளர்களுக்கான நீக்கல்கள்**

**2012.12.31ஆந் திகதிக்கு**

| | |
|---|---|
| உரிமை கோரப்படாத | 387,233 |
| விகிதாசார வரி | 178,118 |
| உடன்பாட்டிற்கு வராத விடயங்களுக்காக வேண்டி | 54,974 |
| | 2,206,467 |

**2012.12.31ஆந் திகதிக்கு**

**வகைப்படுத்தல் மாற்றங்கள்**

| | |
|---|---|
| ஊழியர் சேமலாப நிதி | 631,655 |
| ஊழியர் நம்பிக்கை நிதி | 86,135 |
| | 717,790 |

**2012.12.31ஆந் திகதிக்கு**

**குறிப்பு 09**

உடைத்து நீக்கப்பட்ட தற்போது பிரயோகத்தில் இல்லாத கட்டிடங்களின் தூய பெறுமதி புத்தகத்திலிருந்து நீக்குதல்

| | |
|---|---|
| செலவு | 435,611 |
| ஒட்டுமொத்தக் குறைப்பு | (257,111) |
| | 178,500 |

**குறிப்பு : 26**

**பணிப்பாளர் சபை தொடர்பு**

நிறுவனத்தின் நிதி மற்றும் செயற்பாட்டுத் தீர்மானங்களில் விளைவுள் ஏற்படுத்தக் கூடிய எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களும் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்படவில்லை. பணிப்பாளர் சபை தொடர்பான விரிவான விளக்கமொனறு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| இலக்கம் | பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பெயர்கள் | நியமிக்கப்பட்ட திகதி | வகிக்கும் பதவி மற்றும் சேவை நிலையம் - முகவரி | முகவரி | தொடர்புபட்ட சாரார்களின் கொடுக்கல் வாங்கல் இயல்பு |
|---|---|---|---|---|---|
| 1 | வழக்கறிஞர் திரு. அசோக்க சேரசிங்க | 2011.12.20 | பணிப்பாளர் சபைத் தலைவர் தலைவர் - இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் | தலைவர் இலங்கை தேசிய திரைப்படக் கொழும்பு 07 | - |
| 2 | வழக்கறிஞர் திரு. டீ. கருணாரத்ன | 2010.07.29 மீண்டும் நியமித்தல் 2013.07.18 | பணிப்பாளர் சபை அங்கத்தவர் செயற்பாட்டு பணிப்பாளர் இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் | செயற்பாட்டு பணிப்பாளர் இலங்கை தேசிய திரைப்படக் கொழும்பு 07 | - |
| 3 | பேராசிரியர் திரு. ஆரியரத்ன அத்துகல | 2010 ஆகஸ்ட் | பணிப்பாளர் சபை அங்கத்தவர் (அதிகாரபூர்வமாக)பணிப்பளார் - அரசாங் தகவல் திணைக்களம் | பணிப்பாளர் அரசாங்க தகவல் திணைக்களம் கொழுழ்ம்பு 05 | - |
| 4 | வழக்கறிஞர் திரு. சமந்த வெலிவேறிய | 2010 ஆகஸ்ட் | பணிப்பாளர் சபை அங்கத்தவர் (அதிகாரபூர்வமாக)பணிப்பாளர் - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் | பணிப்பாளர் நாயகம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் கொழும்பு 07 | - |
| 5 | திரு. டப்ளியு. எம். விஜித கணுகல | 2011 பெப்ரவரி | பணிப்பாளர் சபை அங்கத்தவர் (அதிகாரபூர்வமாக) பணிப்பாளர் - காலாசார அலுவல்கள் திணைக்களம் | பணிப்பாளர் காலாசார அலுவல்கள் திணைக்களம் 08பவது மாடி, செத்சிரிபாய பத்தரமுல்லை | - |
| 6 | போராசிரியர் திரு. ரொனால்ட் அம்பேபால | 2010.07.29 மீண்டும் நியமித்தல் 2013.07.18 | பணிப்பாளர் சபை அங்கத்தவர் (பல்கலைக்கழக பிரதிநிதி) பிரிவுத் தலைவர் - மனோவியல் கல்வி பிரிவு- கொழும்புப் பல்கலைக்கழகம் | மனோவியல் பிரிவு கொழும்பு பல்கலைக்கழகம் கொழும்பு | - |

| இலக்கம் | பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பெயர்கள் | நியமிக்கப்பட்ட திகதி | வகிக்கும் பதவி மற்றும் சேவை நிலையம் - முகவரி | முகவரி | தொடர்புபட்ட சாரார்களின் கொடுக்கல் வாங்கல் இயல்பு |
|---|---|---|---|---|---|
| 7 | கலாநிதி திரு. பிரநீத் அபேசுந்தர | 2010.07.29 மீண்டும் நியமித்தல் 2013.07.18 | பணிப்பாளர் சபை அங்கத்தவர் (பல்கலைக்கழக பிரதிநிதி) பிரிவுத் தலைவர் - சமூக விஞ்ஞான கல்விப் பிரிவு, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | சமூக விஞ்ஞான கல்விப் பிரிவு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் கங்கொடவில நுகேகொடை | - |
| 8 | கலாநிதி திரு. டீ. வெங்கடேஷ்வரன் | 2011.04.06 | பணிப்பாளர் சபை அங்கத்தவர் (முப்படை பிரதிநிதி) | இல. 307, ஜோர்ஜ் ஆர்.டி.சில்வா மாவத் கொழும்பு 13 | - |
| 9 | திருமதி. ரேணுகா பலாசூரிய | 2011.09.21 | பணிப்பாளர் சபை அங்கத்தவர் (சினிமா துறை பிரதிநிதி) | இல. 1330-2, 10வது ஒழுங்கை, போகஹுவத்தை வீதி, பன்னிபிடிய | - |
| 10 | திருமதி. மாலனி கமகே | 2011.02.24 | திரைசேறி பிரதிநிதி பணிப்பாளர் நாயகம் - தேசிய திட்டமிடல் திணைக்களம் (ஓய்வு பெற்றுள்ளார்) | பணிப்பாளர் நாயகம் தேசிய திட்டமிடல் திணைக்களம் நிதி அமைச்சு, கொழும்பு | - |
| 11 | திருமதி. ஜே.சீ. வெலிகமகே | 2013.11.25 | திரைசேறி பிரதிநிதி மேலதிக பணிப்பாளர் நாயகம் அரச நிதி திணைக்களம் | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் அரச நிதித் திணைக்களம் பொதுத் திரைசேறி, கொழும்பு 01 | - |

**குறிப்பு : 27**

**சாத்தியமற்ற பொறுப்புக்கள்**

2013.12.31ஆந் திகதிக்கு கூட்டுத்தாபனத்தின் நிதி மற்றும் செயற்பாட்டு நிலைப்பாட்டிற்கு தாக்கம் புரியக் கூடிய எந்தவொரு சாத்தியமற்ற நிலைப்பாடுகளை அறிக்கைப் படுதத்ப்படவில்லை

**குறிப்பு : 28**

**இருப்பு நிலைக குறிப்புத் திகத்திக்கு பின்னரான பொருத்தங்கள்**

நிதிக் கூற்று திகதிக்குப் பின்னர் நிதி மற்றும் செயற்பாட்டு நிலைப்பாட்டில் ஏற்படுத்தக் கூடியவாறு எந்தவொரு பொருத்தங்களும் அறிக்கைப் படுத்தப்படவில்லை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

மගේ අංකය / எனது இல. / My No. ரீஎம்1/ஈ/என்எப்சீ/1/13/56

මබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 2015 யூன் 22

தலைவர்,

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1971 இன் 47 ஆம் இலக்க தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 31(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு 2015 மார்ச் 24 ஆம் திகதி வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வினை அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

**1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக நிதி நிலைமைக்கூற்று வருமானக்கூற்று, நிதிச்செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை தீர்மானிக்க என்னால் முடியாதுள்ளேன்.

**2 நிதிக்கூற்றுக்கள்**

**2.1 மறுப்பு அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட முக்கியமான விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

(அ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் அரச மானியங்களாக கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 138,062,990 தொகை நடைமுறையல்லாப் பொறுப்பாகக் காண்பிக்கப்படுவதற்குப் பதிலாக ஈடுபடுத்தப்பட்ட மூலதனத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் பிரகாரம் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட எனினும் தற்போது செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் கணக்கு குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 17 இன் பிரகாரம் செயற்பாட்டுக் குத்தகை கணக்கு வைக்கும் போது குத்தகை செலுத்துபவர் தொடர்பாக வெளிப்படுத்தப்பட வேண்டிய ஆகக்குறைந்த தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) கணக்கீட்டு முறைமையில் காணப்பட்ட பின்வரும் பலவீனங்கள் காரணமாக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் செம்மைத்தன்மை மற்றும் துல்லியத்தன்மை என்பவற்றை கணக்காய்வின் போது உறுதிப்படுத்துவது சிக்கலானதாக இருந்தன.

(i) பேரேட்டுக் கணக்குகளில் காணப்படும் மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களிலுள்ள மீதிகளுக்கிடையே வேறுபாடுகள் காணப்பட்டமை

| விபரம் | பேரேட்டின் பிரகாரம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| நானாவித கடன்கொடுத்தோர் | 875,285 | 2,453,542 | 1,578,257 |
| திரைப்பட வாடகை கடன்கொடுத்தோர் | 114,615,930 | 123,977,635 | 9,361,705 |
| திரைப்பட வாடகை கடன்பட்டோர் | 224,918,877 | 156,164,056 | 68,754,821 |
| தயாரிப்பு கடன்பட்டோர் | 106,643,677 | 113,311,542 | 6,667,865 |
| | | | 86,362,648 |

(ii) கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் ஏனைய கடன்பட்டோரைக் காண்பிக்கும் போது கடன்பட்டோர் மீதிக்கு மேலதிகமாக நானாவித

கடன்கொடுத்தோர் பட்டோலையில் வரவு மீதிகளின் கூட்டுத்தொகையும் உள்ளடக்கப்பட்டிருந்தது. அந்த வரவு மீதிகளின் பெறுமதி ரூபா 702,971 ஆக இருந்த போதிலும் அதற்குப் பதிலாக ரூபா 1,578,256 தொகை உள்ளக்கப்பட்டிருந்தது.

(iii) பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் நானாவித கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு மீதி ரூபா 875,286 தொகையாக இருந்ததுடன், பட்டோலையின் தேறிய மீதியும் அதற்கு இணங்கியிருந்தது. எனினும் அப்பட்டோலையின் செலவு மீதியான ரூபா 1,578,256 தொகை மீண்டும் பேரேட்டு மீதியுடன் கூட்டப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(iv) கூட்டுத்தாபனத்தின் பெயரில் தனியார் வங்கியொன்றில் பேணப்பட்டு வந்த ரூபா 100,949 தொகையான நடைமுறைக் கணக்கு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(v) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரித்மா சபையின் பரீட்சை மீதியின் பிரகாரம் இலங்கை தேசிய திரைப்படக்கூட்டுத்தாபனக் கணக்கின் இறுதி மீதி ரூபா 110,785,369 ஆக இருந்த போதிலும், 2013 இன் ஆரம்ப மீதியாக ரூபா 145,723,112 தொகை முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

(ஆ) விபத்திற்குட்பட்டமையால் நிறுத்திவைக்கப்பட்ட நிலையில் இருந்த ரூபா 7,696,541 கிரயத்திலான வாகனம் தொடர்பாக பேரேட்டுக் கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. இவ்வாகனத்தைக் கொள்வனவு செய்யும் போது ரூபா 1,638,000 ஆன குத்தகை வசதி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்தப்பட வேண்டிய குத்தகை தவணைப் பெறுமதி ரூபா 890,862 ஆக இருந்ததுடன், இப்பெறுமதி குத்தகைக் கடன்கொடுத்தோராக வேறாக காண்பிக்காமல் அட்டுறு செலவினமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2011 ஆம் ஆண்டின் போது உடைத்து அகற்றப்பட்டிருந்த ரூபா 6,080,387 கிரயத்திலான தற்காலிக கட்டிடமொன்றின் பெறுமதியையும் உரிய பெறுமானத்தேய்வு பெறுமதியையும் கணக்குகளிலிருந்தும் பதிவேடுகளிலிருந்தும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அழைப்பு வைப்புக்களுக்காக கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 2,879,113 தொகையான வட்டி வருமானமொன்றாக இனங்காணப்பட்டு மீண்டும் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதனை முதலீட்டுக் கணக்கிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக பெற வேண்டிய தொகையாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) தீர்வையாகாத தயாரிப்புக் கடன் வட்டி ரூபா 4,007,480 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஊ) முன்னைய ஆண்டிற்குரிய சீராக்கமாக ரூபா 12,124,686 தொகை முன்னோக்கி நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்குப் பதிலாக மீளாய்வாண்டில் இறுதியில் முன்கொண்டு வரப்பட்ட திரண்ட இலாபத்திற்கு சீராக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பேரேட்டின் பிரகாரம் பதவியணியினர் கடன், பணிக்கொடை செலவினம், திரையரங்கு கடன்பட்டோர், தயாரிப்புக் கடன்பட்டோர் மற்றும் இணங்காத மற்றும் அறவிட முடியாத, அறவிட முடியாக்கடன் போன்ற கணக்குகளில் மீதிகள் மற்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைக்கு இடையே ரூபா 6,967,159 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனக் கணக்கு சகல திணைக்களங்களுக்கு இடையேயான கொடுக்கல்வாங்கல்கள் பதியப்படும் ஒரு நடைமுறைக் கணக்காக இருந்ததுடன் அதன் இறுதி மீதி ரூபா 4,074,740 (வரவு) ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், இதற்கு இணையாக பேணப்பட்டு வரும் திரைப்பட விநியோக சபைக் கணக்கிற்குரிய மீதி சீராக்கப்பட்டதன் பின்னர் மேலும் நிலவிய மீதி ரூபா 2,265,568 ஆகக் காணப்பட்டது. இங்கு நடைமுறைக் கணக்கு மீதிகளை சரியாக இனங்கண்டு இணக்கஞ்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் தலைமை அலுவலகத்தினதும் சரசவி கலைக்கூடத்தினதும் இறுதி இருப்பு பெறுமதி ரூபா 9,033,299 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த இருப்பு பெறுமதி ரூபா 10,527,223 ஆக இருந்தமையால் ரூபா 1,493,924 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) தயாரிப்புக் கடன்பட்டோர்

(i) தயாரிப்புக் கடன்பட்டோரின் மொத்தப் பெறுமதி ரூபா 108,581,808 ஆக இருந்ததுடன், மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன்பட்டோரின் அளவு ரூபா 69,432,725 தொகை அல்லது 64 சதவீதமாக இருந்தது. மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதியில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன்பட்டோரின் அளவு ரூபா 52,361,734 அல்லது 48 சதவீதமாக இருந்தது. இப்பணத்தை அறவீடு செய்வதற்கு போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமைக்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) தயாரிப்புக் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் தயாரிப்புக் கடன்பட்டோர் கணக்கின் மீதி ரூபா 106,643,677 ஆக இருந்ததுடன், அப் பெறுமதிக்கு திரைப்பட வாடகை கடன்கொடுத்தோர் பட்டோலையிலுள்ள ரூபா 9,361,705 தொகையான வரவு மீதி மற்றும் நானாவித கடன்பட்டோர் பட்டோலையிலுள்ள ரூபா 1,927,407 தொகையான செலவு மீதியும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தது. இதில் தயாரிப்புக் கடன் வட்டி ஒதுக்கீட்டுக் கணக்கின் மீதியான ரூபா 4,618,806 தொகை அடிப்படையொன்று இல்லாமல் தயாரிப்புக் கடன்பட்டோரிடமிருந்து கழித்து தேறிய கடன்பட்டோர் பெறுமதி ரூபா 113,311,542 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இக் கடன்பட்டோர் மீதி தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது.

### (ஆ) திரையரங்கு கடன்பட்டோர்

(i) 2001 ஆம் ஆண்டில் திரையரங்குகளுக்கு திரைப்படங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகளை தனியார் சபைகளுக்கு ஒப்படைப்பதற்கு முன்னரும் பின்னரும் காணப்பட்ட எனினும் தற்பொழுது மூடப்பட்டுள்ள 254 திரையரங்குகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 66,215,410 ஆக இருந்தது. அத்தோடு ஏனைய சபைகளுக்குச் சொந்தமாக இருந்து மூடப்பட்டிருந்த 36 திரையரங்குகளிலிருந்து

ரித்மா சபைக்கு அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 172,150 ஆக இருந்தது.

(ii) தற்போது செயற்பாட்டிலுள்ள சபைகளுக்குரிய 151 திரையரங்குகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 149,548,660 ஆக இருந்தது. அத்தோடு மீளாய்வாண்டின் இறுதியில் ரித்மா சபைக்கு அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா நிலுவைத் தொகையின் அளவு ரூபா 11,030,269 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் திரையரங்குகள், தயாரிப்பு, ஏனைய கடன் மற்றும் ஊழியர் முற்பணங்களாக ரூபா 296,776,425 தொகையான மொத்த கடன்கள் அறவிடப்பட வேண்டியிருந்தது. அக் கடன்பட்டோரிடமிருந்து ரூபா 121,433,546 தொகை உடன்படாத மற்றும் அறவிட முடியாதிருந்த கடன் மீதிகளுக்காக 100 சதவீதம் அறவிட முடியாக் கடன் ஏற்பாடாகவும் மிகுதிக் கடன்பட்டோரிற்காக 5 சதவீதம் அறவிட முடியாக் கடன் ஏற்பாடாகவும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் மேற்படி கடன்பட்டோரிடமிருந்து ரூபா 129,178,138 தொகை அல்லது 44 சதவீதம் மீள அறவீடு செய்வதில் நிச்சயமற்ற நிலைமையில் இருப்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் கட்டிட வாடகை, நீர் மற்றும் மின்சாரப் பட்டியல் என்பவற்றிற்காக கிடைக்க வேண்டியிருந்த தொகையாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 945,300 தொகை 2013 ஆம் ஆண்டிலும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வைப்புக்கள் ரூபா 926,228 தொகையாக இருந்ததுடன், அதில் ரூபா 653,728 தொகை அல்லது 71 சதவீதம் குறித்த நிறுவனங்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் மீள அறவிட முடியாதென்ற அடிப்படையில் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்திலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) ஓய்வுபெற்ற, சேவையிலிருந்து நீக்கப்பட்ட மற்றும் சேவையிலிருந்து விலகிச் சென்ற 06 உத்தியோகத்தர்களுக்குரிய ஊழியர் முற்பணமாக வழங்கப்பட்டிருந்த ரூபா 730,352 தொகையான இடர் கடன் தொகை மற்றும்

ரூபா 62,370 தொகையான வட்டி என்பன 01 ஆண்டு முதல் 10 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், 2013 ஆம் ஆண்டின் போது இவ் உத்தியோகத்தர்களிடமிருந்து எத்தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(எ) 1999 ஆம் ஆண்டின் போது சுயவிருப்பத்தில் சேவையிலிருந்து விலகிய ஊழியர்களுக்கு இழப்பீடு செலுத்துவதற்காக திறைசேரியிலிருந்து வழங்கப்பட்டிருந்த தொகையில் எஞ்சிய ரூபா 5,000,000 தொகையானது மீளாய்வாண்டின் இறுதி வரையில் மீண்டும் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் ஒவ்வொரு விடயங்களிற்கு முன்னால் காணப்படும் சான்றுகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| | கணக்கின் விபரம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத எழுத்து மூலச் சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | தயாரிப்பு கடன் வட்டி ஒதுக்கீடு | 4,618,805 | கணிப்பீட்டு விபரம் |
| (ஆ) | வைப்புக்கள் மற்றும் முன்கொண்டு வரப்பட்ட கொடுப்பனவுகள் | 3,802,115 | பற்றுச்சீட்டுக்கள் |
| (இ) | கடன்பட்டோர் - திரையரங்குகள் | 156,164,056 | மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் |
| (ஈ) | கடன்பட்டோர் - தயாரிப்பாளர்கள் | 113,311,542 | - மேற்படி - |
| (உ) | ஏனைய கடன்கொடுத்தோர் | 37,933,601 | காலப்பகுப்பாய்வு |
| (ஊ) | வைப்புக்கள் | 2,446,727 | - மேற்படி - |
| (எ) | பயன்படுத்தப்படாத இருப்புக்கள் | 2,252,818 | விரிவான பட்டோலைகள் |
| (ஏ) | மிகை அறவீடு ஒதுக்கீடு (திரையரங்குகளின் வாடகைக்காக) | 72,004,555 | விரிவான பட்டோலைகள் மற்றும் காலப்பகுப்பாய்வு |
| (ஐ) | திரையரங்கு ஒலி உபகரணங்கள் இருப்பு | 10,592,257 | இருப்பு மெய்மையாய்வு அறிக்கை |
| (ஒ) | திரைப்பட இருப்புக்கள் | 5,253,886 | - மேற்படி - |
| | | 408,380,362 | |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1985 இன் 45 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1971 இன் 47 ஆம் இலக்க தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டம் மற்றும் 2011 செப்தெம்பர் 28 ஆம் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | செயற்பாட்டு பணிப்பாளர் ஒருவரை நியமிப்பதற்காக நிதி ஏற்பாடு அல்லது பதவியொன்று இல்லாமல் இருந்த போதிலும், செயற்பாட்டு பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு ரூபா 45,000 மாதாந்த படிகளும் மாதாந்தம் 140 லீற்றர் எரிபொருள் படிகள் மற்றும் சாரதியுடன் உத்தியோகபூர்வ வாகனமொன்றும் வழங்கப்பட்டிருந்த போதிலும், குறித்த உத்தியோகத்தர் முழுநேரம் கூட்டுத்தாபன கடமைகளில் ஈடுபடாமல் இருந்ததுடன், இந்த உத்தியோகத்தருக்கு கடமைப் பட்டியலொன்றும் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 110 | இழப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று நாளது வரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 177(I) | நாளாந்தம் பெறப்படும் முழுப் பணத்தையும் நாளாந்தம் அல்லது உடனடியாக வங்கியில் வைப்பிலிடப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செயற்படாத 9 சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டது. |
| (iii) நிதிப் பிரமாணம் 177(3) | கிடைக்கப் பெறும் மொத்தப் பணத்தையும் வங்கியிலிடப்பட வேண்டிய போதிலும் தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் ரூபா 122,622 |

| | | |
|---|---|---|
| | | தொகை வங்கியிலிடப்படாமல் கிடைக்கப்பெற்ற தொகை கூட்டுத்தாபனத்தின் நாளாந்த செலவுகளை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப் பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (இ) | 1999 ஒக்தோபர் 08 ஆம் திகதிய 22/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 1.3 ஆம் பந்தி | போக்குவரத்து வசதிகள் உரித்தற்ற சம்பளத் தொகுதியின் பெண் உத்தியோகத்தரொருவருக்கு அங்கீகாரமின்றி அலுவலகம் மற்றும் வீட்டிற்கு இடையே தனியாக சென்று வருவதற்காக போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2007 மே 11 ஆம் திகதிய 09/2007 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | ஓய்வு பெற்றவர்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துகையில் பொருத்தமான பதிலாள் ஒருவரைத் தேடிக்கொள்வதற்கு சிக்கலான பதவிகளுக்கு மாத்திரம் ஈடுபடுத்த முடியுமாக இருந்த போதிலும், அவ்வகுதிக்கு உட்படாத சாரதி பதவியொன்றுக்காக ஓய்வுபெற்ற ஒரு உத்தியோகத்தர் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக உரிய அமைச்சு செயலாளரின் இணக்கப்பாட்டையும் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 58,337,827 தொகையான வரிக்கு முன்னரான தேறிய நட்டமாக இருந்ததுடன் அதனேடொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னரான தேறிய நட்டம் ரூபா 50,487,786 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தேறிய நட்டம் தொடர்ந்தும் ரூபா 7,850,041 ஆல் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மீண்டுவரும் மானியமாக முறையே ரூபா 69,960,000 மற்றும் ரூபா 68,308,000 கிடைக்கப்பெற்றிருந்ததன் காரணமாக மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் இலாபம் முறையே ரூபா 11,622,173 மற்றும் ரூபா 17,820,214 ஆக இருந்தன.

3.2 கூட்டுத்தாபனத்திற்கு எதிராக அல்லது கூட்டுத்தாபனத்தினால் தொடரப்பட்ட வழக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1980 பெப்ரவரி 19 ஆம் திகதிய கொள்கைத் திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் அமைச்சுச் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம், அரச நிறுவனங்களின் சட்டபூர்வ நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபதியின் சேவை பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தால் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் 15 வழக்குகளுக்காக வெளி சட்டத்தரணிகளுக்கு சட்டக் கட்டணங்களுக்காக ரூபா 1,656,000 தொகை செலவிடப்பட்டிருந்தன. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 843 சதவீத அதிகரிப்பாகும்.

(ஆ) கூட்டுத்தாபனத்தினால் வெளித்தரப்பினருக்கு எதிராக ரூபா 23,534,184 தொகையான இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்காக 03 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன், நிதிக்கூற்றுக்களில் கணக்கு குறிப்புக்களில் இது தொடர்பாக தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

(அ) திரைப்படக் கடன்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) காட்சிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படாத 26 திரைப்படங்களைத் தயாரிப்பதற்காக ரூபா 5,473,150 தொகையான கடன் வழங்கப்பட்டிருந்ததுடன், 5 ஆண்டுகள் கடந்திருந்த அக்கடன் தொகையில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் உள்ளவாறு ரூபா 4,019,261 தொகை அல்லது 73 சதவீதமான கடன் தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ii) காட்சிப்படுத்தலுக்காக விடுவிக்கப்பட்ட 48 திரைப்படங்களைத் தயாரிப்பதற்காக ரூபா 63,460,241 தொகையான கடன் வழங்கப்பட்டிருந்ததுடன், 5 ஆண்டுகள் கடந்திருந்த அக்கடன் தொகையில் ரூபா 28,333,559 தொகை அல்லது 48 சதவீதம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்தது.

(iii) காட்சிப்படுத்தலுக்காக விடுவிக்கப்பட்ட 16 திரைப்படங்களைத் தயாரிப்பதற்காக ரூபா 26,182,836 தொகையான கடன் வழங்கப்பட்டிருந்ததுடன், 5 ஆண்டுகளுக்கு குறைவான அக்கடன் தொகையில் ரூபா 11,322,942 தொகை அல்லது 43 சதவீதம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்தது.

(iv) காட்சிப்படுத்தலுக்காக வெளியிடப்படாத எனினும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட 13 திரைப்படங்களைத் தயாரிப்பதற்காக கடன் வழங்கப்பட்டு 5 ஆண்டுகளுக்கு குறைவான ரூபா 17,940,763 தொகையான கடன் முழுவதும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்தது.

(v) வேலைகள் பூர்த்தி செய்யப்படாத 12 திரைப்படங்களைத் தயாரிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த 5 ஆண்டுகளுக்கு குறைவான ரூபா 5,978,641 தொகையான கடன் தொகை முழுவதும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) **திரையரங்குகளுக்காக கடன் வழங்குதல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2003 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கைகளில் கைச்சாத்திடாது ஒரு திரையரங்கொன்றிற்கு ரூபா 1,100,000 கடன் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 571,738 ஆகக் காணப்பட்டது.

(ii) 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் 09 திரையரங்குகளை நவீனமயப்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 12,822,682 கடன் தொகையில் மீளாய்வாண்டில் இறுதியிலான வட்டி உட்பட ரூபா 15,875,103 ஆக இருந்தது. மீளாய்வாண்டினுள் 04 திரையரங்குகளிலிருந்து ரூபா 1,992,560 அறவிடப்பட்டிருந்த போதிலும், 04 திரையரங்குகளிலிருந்து எவ்வித தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவத் திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உரிய திகதியில் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படாத திரைப்பட வாடகை மற்றும் கூட்டுத்தாபனத்தின் நம்பிக்கைப் பொறுப்பிற்காக அறவிடப்பட வேண்டிய 2.5 சதவீதமான ரூபா 3,625,698 ஆன மிகைக்கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 81,250 பெறுமதியான காற்றுசீராக்கி இயந்திரமொன்றின் உள்ளகப் பகுதியொன்று மீளாய்வாண்டின் போது காணாமல் போயிருந்ததுடன், இது தொடர்பான பொறுப்பு பாதுகாப்பு பிரிவிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய உரிய நடைமுறைகளை குறித்த காலப்பகுதியில் எடுக்கப்படாமல் இருந்ததுடன் நட்டமாக ரூபா 15,000 தொகை செலுத்துவதற்கு இணங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்நட்டத்திற்கான மதிப்பீடு அது தொடர்பான அறிவுடைய தரப்பினரால் நிறைவேற்றப்படாதிருந்தமையால் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை இனங்காண்பதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தமை நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

## 4.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

முறைகேடுகள் காரணமாக திரையரங்குகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய கடந்த ஆண்டிற்குரிய வரவுத்தாள் அடிப்படையில் மிகை அறவீடுகள் வேறாக இனங்காணக்கூடிய வகையில் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. மேலும், கூட்டுத்தாபனத்தின் பரிசோதனைப் பிரிவால் கண்டுபிடிக்கப்பட்ட முறைகேடுகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 394,170 பெறுமதியான 101 வரவுத்தாள்கள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் 73 வரவுத்தாள்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 242,510 தொகையை அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்தோடு மீளாய்வாண்டிற்கு முன்னர் விநியோகிக்கப்பட்டிருந்த 43 வரவுத்தாள்களிலிருந்து ரூபா 399,072 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**4.4 மெதுவாக அசையும் பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்கள்**

திரையரங்குகளை நவீனமயப்படுத்துவதற்கான கடன் வசதிகளின் கீழ் 2012 ஆம் ஆண்டின் போது 5 DTS ஒலிபெருக்கிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 10,592,257 பெறுமதியான 03 ஒலிபெருக்கிகளை 03 திரையரங்குகளுக்கு வழங்குவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்ததுடன், 02 ஆண்டுகளாக விளைவற்றுக் காணப்பட்டன.

**4.5 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நீண்டகால முதலீடாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 127,000 பெறுமதியுடன் கூடிய அரச கம்பனியொன்றில் முதலீட்டுத் தொகைக்காக எவ்வித நலனும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ஆ) சார்க் கலாச்சார நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்த கட்டிடத்தின் குத்தகை காலப்பகுதி 2013 மார்ச் 01 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும், புதிய குத்தகை உடன்படிக்கையினை மேற்கொள்வது 2013 செப்தெம்பர் 12 ஆம் திகதி வரை தாமதமாக்கப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் போது பெற்றுக் கொண்டிருந்த புதிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் கட்டிடத்திற்காக வழங்கப்பட்டிருந்த மாதாந்த வீதவரி மதிப்பீடு ரூபா 230,000 ஆக இருந்த போதிலும், ரூபா 200,000 தொகையான மாதந்த வாடகைக்கு ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) பிரசித்தி பெற்ற நடன கட்டுப்பாட்டுச் சபைக்காக மாதாந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 100,000 தொகையான கட்டிடம் ரூபா 60,000 தொகையான வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கலைக்கூட கட்டிடத்திற்கான வீதவரிப் பணத்தை செலுத்துவதற்கு ஏற்பட்ட தாமதம் காரணமாக மீளாய்வாண்டின் போது மிகை அறவீடாக ரூபா 16,246 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

வங்கிக் கணக்கிணக்க கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்த 5 வருடங்களுக்கு மேல் பழமையான ரூபா 105,446 ஆன தீர்வையாகாத வைப்புக்கள் மற்றும் ரூபா 25,063 ஆன இனங்காணப்படாத வரவு மீதிகள் மீளாய்வாண்டின் இலாபநட்டக் கணக்கிற்கு பதிவழிக்கப்பட்டிருந்தன.

## 4.7 தாமதமான செயற்திட்டங்கள்

2011 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஒப்பந்தப் பெறுமதி ரூபா 13,185,362 தொகையான 03 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டிலும் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன், தாமத காலம் 03 வருடங்களும் 05 மாதங்களுமாகும்.

## 4.8 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 செப்தெம்பர் 28 கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் 2012 செப்தெம்பர் 14 ஆம் திகதி ஆட்சேர்ப்பு நடைமுறையும் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் பதவியணியில் 08 பதவி வகைகளுக்குரிய 55 உத்தியோகத்தர்களுக்கு வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 30 சதவீதமாக இருந்தது. அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப தர (தேர்ச்சித் தரமல்லாத) பதவி வகுதியில் 06 ஊழியர்கள் மிகையாகவும் அங்கீகரிக்கப்படாத வேறு பதவிகளில் 06 ஊழியர்கள் மிகையாகவும் இருந்தனர். பதவியணியில் நிறைவேற்று தரத்திலான 11 பதவிகளும் உதவி சேவைகளுக்குரிய 35 பதவிகளும் ஆரம்ப தரத்தில் 09 பதவிகளும் வெற்றிடங்களாகக் காணப்பட்டன.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் உள்ள 03 பதவிகளும் 1 முதல் 5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் வெற்றிடமாக காணப்பட்டதுடன் அப்பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யாமல் தொடர்ந்தும் பதவிகளில் பதில் கடமைக்காக நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் பதவிகளுக்கு மேலதிகமாக முகாமைத்துவ மற்றும் கனிஷ்ட முகாமைத்துவ மட்டங்களில் 23 பதவிகளுக்கிடையே 08 பதவிகள் 2 ஆண்டு முதல் 29 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் வெற்றிடங்களாக காணப்பட்டன.

(ஈ) கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் போது கலைக்கூடம் முக்கியமான செயற்பணியொன்றை மேற்கொள்ளும் பிரிவொன்றாக இருந்த போதிலும், உதவி பொது முகாமையாளர் (கலைக்கூட சேவை) ஆய்வுகூட மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர், ஒலி மற்றும் தொகுத்தறி உத்தியோகத்தர் மற்றும் 08 முகாமைத்துவ உதவியாளர் - தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் உட்பட 12 உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறை காணப்பட்டதுடன் அது அப்பிரிவின் மொத்த உத்தியோகத்தர் எண்ணிக்கையின் 34 சதவீதமாக இருந்தது.

(உ) பொறியியல் தொழில்நுட்ப சேவைப் பிரிவிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் 09 ஆக இருந்த போதிலும், உதவி பொது முகாமையாளர் பொறியியல் தொழில்நுட்ப சேவை பதவி 02 முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பதவிகள் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் பதவியொன்று எனும் ரீதியில் 04 பிரதான பதவிகளும் வெற்றிடங்களாக காணப்பட்டன.

(ஊ) முகாமையாளர் அலுகத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட 04 பதவிகளில் ஒரு அலுவலக உதவியாளர் மாத்திரமே நிரந்தரமாக நியமிக்கப்பட்டிருந்தார்.

## 4.9 வாகனப் பயன்பாடு

கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான வாகன அணியில் 09 வாகனங்கள் காணப்பட்டதுடன் அவற்றில் 02 ஒதுக்கப்பட்ட வாகனங்களாகும். மீளாய்வாண்டின் போது அந்த வாகனங்கள் பயணம் செய்த மொத்த தூரம் 112,672 கிலோ மீற்றர்களாக இருந்ததுடன் பராமரிப்புச் செலவு ரூபா 2,487,920 ஆகவும் எரிபொருள் செலவு ரூபா 1,716,765 ஆகவும் இருந்தன. அதற்கிணங்க ஒரு கிலோ மீற்றருக்காக மேற்கொள்ளப்பட்ட பராமரிப்பு மற்றும் எரிபொருள் செலவு முறையே ரூபா 22.08 மற்றும் ரூபா 15.24 ஆக இருந்தது.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு பூர்த்தியடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 193 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2014 செப்தெம்பர் 12 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

5.2 செயன்நடவடிக்கைத் திட்டம்

கலைக்கூட வசதிகளை மேம்படுத்தல் மற்றும் நவீனமயப்படுத்தலின் கீழ் மீளாய்வாண்டின் போது ரூபா 41.5 மில்லியன் தொகையானது 4 செயற்பாடுகளை மேற்கொண்டு பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதன் செயற்பாடுகள் மீளாய்வாண்டின் போதும் இடம்பெற்றிருக்கவில்லை.

5.3 உள்ளகக் கணக்காய்வு

கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்காக உள்ளகக் கணக்காய்வாளர், 02 முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் என அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு ஒதுக்கப்பட்டிருந்த போதும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்காக உள்ளகக் கணக்காய்வாளர் தவிர்ந்த அப்பிரிவிற்கான ஏனைய உத்தியோகத்தர்களின் பதவிகள் ஆண்டு பூராகவும் தொடர்ச்சியாக வழங்கப்படாமையால் உள்ளகக் கணக்காய்வின் நோக்கத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிக்கொள்வதற்கு உள்ள வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதிடப்பட்ட வருமானம் மற்றும் பாதிடப்பட்ட செலவினங்களினை, உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களுடன் ஒப்பீடு செய்த போது 06 வருமானம் மற்றும் செலவினத் தொகுதிகள் தொடர்பாக 50 சதவீதத்திற்கு மேற்பட்ட முரண்கள் காணப்பட்டதனால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள நலிவுகள் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு அவ்வப்போது தெரிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கடன் கட்டுப்பாடு

(ஆ) மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்கள்

(இ) முதலீடு

(ஈ) சில்லறைக் காசு முற்பணம்

(உ) திரையரங்கு பரிசோதனை

(ஊ) கணக்கீடு

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

ශ්‍රී ලංකා ජාතික චිත්‍රපට සංස්ථාව
පාර්ලිමේන්තු ප්‍රතිසංස්කරණ හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය

இலங்கைத் தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனம்
பாராளுமன்ற மறுசீரமைப்பபு மற்றும் வெகுசன ஊடக அமைச்ச

**National Film Corporation of Sri Lanka**
**Ministry of Parliamentary Reforms & Mass Media**


අංක 303, බෞද්ධාලෝක මාවත, කොළඹ 07. | දුරකතන - 0112-584623 / 0112-588773 | විද්‍යුත් තැපෑල-filmcorp@sltnet.lk | වෙබ් අඩවිය -www.nfc.gov.lk
இல.303, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07. | தொலைபேசி-0112-584623 / 0112-588773 | மின்னஞ்கல் புக்குககுகின்-filmcorp@sltnet.lk | இணையத்குளம்-www.nfc.gov.lk
No.303, Bauddhloka Mawatha, Colombo 07. | Tel - 0112-584623 / 0112-588773 | Email-filmcorp@sltnet.lk | Website-www.nfc.gov.lk